விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

**கல்யாண மாலை**
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 179 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 01 வெள்ளிக்கிழமை (16.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## குருந்தூர்மலை நிலங்களை பகிர்ந்தளிக்க தீர்மானிக்கவில்லை

### ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு குருந்தூர் மலைக்கு சொந்தமான அரச காணியை வெளித்தரப்பினருக்கு கொடுக்க தீர்மானிக்கப்படவில்லை என ஜனாதிபதி செயலகம், தொல்பொருள் ஆய்வாளர் எல்லாவல மேதானந்த தேரருக்கு விளக்கமளித்துள்ளது.

தொல்பொருள் பெறுமதி மிக்க குறித்த காணியில், இந்து மற்றும் பௌத்த சின்னங்கள் உள்ளதாக கருதப்படுகிறது.

இந்தநிலையில், குறித்த விடயம் தொடர்பில், அண்மையில் தொல்பொருள் திணைக்களத்துக் 02


## 350 ஆசிரியர்களுக்கு இன்று நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணபாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக தேர்வு செய்யப்பட்ட 350 தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது என வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார 15

## தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் பதவி விலகல்

# தென்னிலங்கையில் ரணிலுக்கு கடும் எதிர்ப்பு



(கொழும்பு)

- ஜனாதிபதியின் கருத்து தேரர்களால் நிராகரிப்பு.
- தொல்பொருள் விவகாரத்தை மகாநாயக்கர்களிடம் கொண்டு செல்வோம் எனத் தெரிவிப்பு.
- தமிழர்களின் வாக்குகளுக்காகவே தொல்பொருள் மரபுரிமைகளை ரணில் ஆயுதமாக பயன்படுத்துவதாக குற்றச்சாட்டு.

(15ஆம் பக்கம் பார்க்க)

## 60 வகையான மருந்துகளின் விலை குறைப்பு

(கொழும்பு)

நாட்டில் 60 வகையான மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலையைக் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக சுகாதார 15

## 3 அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு

(கொழும்பு)

லங்கா சதொச நிறுவனம் மேலும் 3 அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை குறைத்துள்ளது.

இதன் படி, ஒரு கிலோ கிராம் கோதுமை 15

## சமுர்த்தி இழந்தவர்கள் முறையீடு செய்யலாம்



### சாகல ரத்நாயக்க

(கொழும்பு)

சமுர்த்தி மானியங்களை இழந்த பயனாளிகளுக்கு மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித் 15

## எதிர்வரும் 19ஆம் திகதி ஐ.நா கூட்டத் தொடர் ஆரம்பம்

# இலங்கை தொடர்பாக 21ஆம் திகதி வாய்மொழி மூல அறிக்கை

(ஜெனிவா)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது.

இது சர்வதேச தளத்தில் இலங்கைக்கு பெரும் இராஜதந்திர சமர் எனக் கருதப்படுகின்றது.

அந்த வகையில், இலங்கையின் மனித உரிமைகளின் நிலை தொடர்பில் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் வாய்மொழி மூல அறிக்கை எதிர்வரும் 21ஆம் திகதி அமர்வில் வாசிக்கப்படவுள்ளது.

இம்மாதம் 19 15

## கருத்துச் சுதந்திரம் இல்லாதொழிக்கப்படாது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் கருத்து சுதந்திர உரிமையை இல்லாதொழிக்கும் வண்ணம் ஒருபோதும் செயற்படப் போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று பிற்பகல் ஹோமாகம பிரதேச செயலக வளாகத்தில் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை இணையத்தளத்தில் வழங் 02

ஒக்டோபர் 15

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

3ஆம் பக்கம் பார்க்க

## முன்னணி உறுப்பினர்கள்

# நால்வர் கைதாகி பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவி வாசுகி சுதாகர், மகளிர் அணிச் செயலாளர் கிருபா கிரிதரன் யாழ்.மாவட்ட அமைப்பாளர் தீபன் உட்பட நால்வர் நேற்று பொலிஸாரல் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்

இவர்கள் நேற்று, மருதங்கேணி விவ 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தொழிலாளர் சட்டத்தின் குறைபாடுகள் திருத்தப்படும்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார

(கொழும்பு)

தற்போதுள்ள தொழிலாளர் சட்டத்தின் குறைபாடுகளை திருத்தும் வகையில் புதிய தொழிலாளர் சட்ட சட்டமூலத்தை தொழிலாளர் ஆலோசனை சபையில் விரைவில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தொழிலாளர் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சட்டமூலத்திற்கான பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். தொழிலாளர் அமைச்சில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட அமைச்சர் மனுஷ நாணயக்கார பின்வரும் கருத்துக்களை வெளியிட்டார். இப்பிரேரணையின் படி ஆட்சேர்ப்பு அல்லது பணியிடத்தில் ஒரு ஊழியருக்கு எதிரான பாகுபாட்டைத் தடுக்க சட்ட விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

நிர்வாக கவுன்சில் கட்டளைச் சட்டத்தில் பணி நிலைமைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்த கடைகள் மற்றும் அலுவலகங்கள் சட்டத்தின் விதிகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் அகற்றப்பட்டு அனைவருக்கும் சமமான ஏற்பாடுகள் செய்யப்படும். மேலும் பணியாளர்கள், அனைத்து பணியிட துன்புறுத்தல்கள் மற்றும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பான சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல்.

பின்னர் ஊழியர்களின் விருப்பத்திற்கு ஏற்ப 5 நாள் வாரம் மற்றும் நெகிழ்வான வேலை நேரங்களை அறிமுகப்படுத்துதல். பகுதி நேர வேலையில் ஈடுபடுவதற்கு தொடர்புடைய சட்ட விதிகளை உருவாக்குதல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இரவில் பெண் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு சட்டம், தந்தைவழி விடுப்பு தொடர்பான சட்ட ஏற்பாடுகள் செய்யப்படும்.

இந்தக் குறிப்பின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தொழிலாளர் சட்ட மாதிரி, தொழிலாளர் ஆலோசனைக் குழுவில் விரைவில் சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் அது சட்டமாக்கப்படும் என்றார். (ம-7,104)

# மூளைச் சாவடைந்த இளம் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)


உடல் சுகயீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் உடல் சுகயீனம் காரணமாக கடந்த 7ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

மூளாய் - வேரம் பகுதியைச் சேர்ந்த ஜெனார்த்தனன் கனிஷ்ரிகா (வயது 25) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,104)


அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அன்புடையீர்!

கடந்த 18.05.2023 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எம் குடும்பத் தலைவர்

அமரர்

கந்தப்பர் கதிர்காமத்தம்பி

[ ஓய்வு நிலை நெசவு போதனாசிரியர் ]

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 17.06.2023 சனிக்கிழமை அன்று அதிகாலை 4.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று அஸ்தி கரைக்கப்படும் அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும், கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

(C-6748)

நாகப்பாவளவு,
கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.
071 462 5071

இங்ஙனம் :
குடும்பத்தினர்





90 வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

16.06.2023

திரு. சுந்தரம் இரத்தினம்

தனது தொண்ணூறாவது அகவையில் காலடி பதிக்கும் எங்கள் தந்தையை இன்னும் பல்லாண்டு காலம் நோய் நொடியின்றி வாழ வாழ்த்தி மகிழ்கின்றோம்.

(15976)

அன்புடன் வாழ்த்தும் - குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள்

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. 077 753 2508


## குருந்தூர்...

கும் ஜனாதிபதிக்கும் வாக்கு வாதம் ஒன்று இடம்பெற்றது.

இவ்வாறான பின்னணியில் அரசுக்கு சொந்தமான இந்த காணியை எந்தவொரு வெளித்தரப்பினருக்கும் வழங்க இது வரையில் தீர்மானிக்கப் படவில்லை என ஜனாதிபதி செயலகம் விளக்கமளித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நால்வர்...

காரம் தொடர்பில் வாக்கு மூலம் பெறுவதற்காக பொலிஸாரால் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

இரணைமடு சந்தியிலுள்ள மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவில் நேற்று காலை 9.45 மணி தொடக்கம் 2.00 மணி வரை இவர்களது வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டது.

வாக்கு மூலம் பெற்ற பின் அவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதி மன்றில் முற்படுத்தப்பட்ட வேளை அவர்களை பிணையில் செல்வதற்கு நீதி மன்றம் அனுமதி வழங்கியது. (ம-7)

## கருத்து...

கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உத்தேச இலத்திரனியல் ஒலிபரப்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு சட்டத்தின் ஊடாக இலத்திரனியல் ஊடகத்தினால் எந்தவொரு தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்பட்டால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிவாரணம் பெறுவதற்கான சந்தர்ப்பம் வழங்குவது மாத்திரமே இடம்பெறும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகில் ஒவ்வொரு நாட்டிலும் இலத்திரனியல் ஊடகங்களைக் கையாள்வதற்கு இவ்வாறான முறை பயன்படுத்தப்படுவதாகத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய இராச்சியத்தின் இலத்திரனியல் ஊடகங்களுக்கான வழிகாட்டல்களை இலங்கையிலும் அமுல்படுத்துமாறு தெரிவித்துள்ளார். (ம-7)

# ஆனந்தசங்கரியின் 90 ஆவது பிறந்தநாள் நிகழ்வு





(கிளிநொச்சி)

தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் 90 ஆவது பிறந்தநாள் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் கொண்டாடப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தை உருவாக்குவதற்காக செயற்பட்டவர் என குறிப்பிட்டு இந்த பிறந்தநாள் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் குருகுலராஜா, கிளிநொச்சி அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், சமத்துவ கட்சியின் தலைவர் மு.சந்திரகுமார், சிறி ரெலோவின் தலைவர் உதயராசா, தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் சிறிதரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு முழுவதும் பாரிய தொழிற்சங்க நடவடிக்கை

# மின்சார சபையின் அதிரடி அறிவிப்பு

**(கொழும்பு)**

**இலங்கை மின்சார சபையை தனியார் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிராக, நாடு முழுவதும் பாரிய தொழில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மின்சார ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் புதிய சட்டமூலங்களை கொண்டு வந்து மின்சார சபையை தனியார் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கான அனைத்து திட்டங்களையும் அரசாங்கம் ஏற்கனவே தயார் செய்துள்ளதாக மின்சார ஊழியர் சங்க பொது செயலாளர் தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் புதிய சட்டமொன்றை பாராளுமன்றத்தில் கொண்டு வருவதற்கு தயாராகியுள்ளதாகவும் புதிய சட்டத்தின் உள்ளடக்கம் குறித்து எழுத்துமூலமான அறிக்கையை வெளியிடவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 3,800 இற்கும் மேற்பட்ட பயிற்சி பெற்ற ஊழியர்களை பெரும் செலவில் பணிநீக்கம் செய்ய வேண்டியிருக்கும் என்றும், மின்சார வாரியத்தை வாங்கும் 15 நிறுவனங்களின் சுமை மின்சார நுகர்வோர் மீது சுமத்தப்படும் என்றும் ரஞ்சன் ஜயலால் குறிப்பிட்டார். (நி)

## க.பொ.த உயர்தர பரீட்சை நடத்துவதற்கான குறிப்பிட்ட மாதமொன்று சட்டப்பூர்வமாக அறிவிக்கப்படும்

### ஜனாதிபதி அறிவிப்பு



(கொழும்பு)

2048 ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்த நாடு என்ற இலக்குகளை அடைவதற்கு முறையான கல்வி முறைமை மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் நாட்டிற்கு தேவை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பை தயாரிப்பதற்கான அமைச்சர்கள் குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்க நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் கலந்துரையாடலில் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

• எதிர்கால சவால்களை முறியடித்து நாட்டில் பயிற்றுவிக்கப்பட்ட பணியாளர்களை உருவாக்கக் கூடிய எதிர்கால சந்ததியை கட்டியெழுப்புவதற்கு கல்வி முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசரத் திருத்தங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பரீட்சைகளை நடத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, க.பொ.த உயர்தரப் பரீட்சையை நடத்த சட்டரீதியாக குறித்த ஒரு மாதத்தை அறிவிக்கவுள்ளதாகவும், அதனை மாற்றுவதானால் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற வேண்டும் எனவும், மிகவும் இக்கட்டான சூழ்நிலைகளில் தவிர அதனை மாற்ற முடியாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மாணவர்களை 13 வருடங்கள் பாடசாலைக் கல்வியில் தக்கவைக்க வேண்டியதன் அவசியத்தை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்த ஜனாதிபதி, க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை மற்றும் 05ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் அவசியம் தொடர்பில் துரிதமாக தீர்மானம் எட்ட வேண்டும் எனவும் தெரிவித்தார். (நி)

## 203 மில்லியன் சிகரெட்டுகளை அழிக்கும் நடவடிக்கை முன்னெடுப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 203 மில்லியன் சிகரெட்டுகள் அழிக்கப்படவுள்ளன. இது இலங்கை வரலாற்றில் இலங்கை சுங்கம் மற்றும் இலங்கை புகையிலை கூட்டுத்தாபனத்தால் கைப்பற்றப்பட்ட மிகப் பெரிய சட்டவிரோத சிகரெட் தொகையென கருதப்படுகிறது.

2021ஆம் ஆண்டு இந்த சிகரெட் தொகை 21 கொள்கலன்களில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டது.

இவற்றின் பெறுமதி 9.7 பில்லியன் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது. உள்ளூர் ஏற்றுமதியாளர் ஒருவர் துபாயில் வசிக்கும் இலங்கையர் ஒருவரின் ஊடாக சட்டவிரோதமாக இந்த சிகரெட்டுக்களை இறக்குமதி செய்துள்ளார். இவை நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மனி உள்ளிட்ட பல நாடுகளுக்கு மீள அனுப்பப்படவிருந்ததாக விசாரணையில் தெரியவந்திருந்தது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் சரத் நோனிஸ் ஆகியோரின் மேற்பார்வையில் முத்து ராஜவெலவில் அமைந்துள்ள கழிவு சக்தி அனல் மின் நிலையத்தில் இந்த சிகரெட்டுகளை அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. (நி)

## அதிகாரத்தைக் கைப்பற்ற சில குழுக்கள் முயற்சி

### ருவான் விஜயவர்தன

(கொழும்பு)

நாட்டின் அதிகாரத்தை கைப்பற்ற எதிர்க்கட்சியை சேர்ந்த சில குழுக்கள் முயல்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

நாடு வங்குரோத்து அடைந்திருந்தவேளையில் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, எதிர்க்கட்சி தலைவருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கும் ஜே.வி.பியின் தலைவருக்கும் பிரதமர் பதவியை வழங்க முன்வந்தார்.

ஆனால் அனைவரும் அதனை ஏற்க மறுத்தனர். ஐக்கியதேசியக் கட்சியின் தலைவர் அதனை ஏற்றுக்கொண்டு நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியுள்ளார்.

எனினும் எதிர்க்கட்சி உட்பட சில குழுக்கள் அதிகாரத்தை கைப்பற்ற முயல்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## போருக்கு பின்னர்

## பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சுமார் 2500 பேர் இதுவரை கைது

(கொழும்பு)

போருக்கு பின்னர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 2500ஐ தாண்டி உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2009 டிசம்பர் 31 முதல் 2022 டிசம்பர் 31 வரை 13 வருடங்களில் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 2793 என இலங்கை பொலிஸ் துறையின் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

தடுப்பு காவல் உத்தரவுகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 2473 என்பதோடு, 184 பேருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. (நி)

## புலமைப்பரிசில் பரீட்சைக்கான திகதி அறிவிப்பு

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆம் திகதி நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று முதல் ஜூலை 6 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. (நி)

## கடவுச்சீட்டுகளை இணையவழி முறையில் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை இணையவழி முறையில் வழங்கும் வேலைத்திட்டம் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது. கடவுச்சீட்டை இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை பொது மக்களுக்கு வழங்கும் நோக்கிலேயே இந்த வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய வேலைத்திட்டத்தின் கீழ், விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த மூன்று நாட்களுக்குள் கடவுச்சீட்டை பொதிகள் சேவைமூலம் தமது வீடுகளுக்கே பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் ஒரு நாள் கடவுச்சீட்டு சேவை வழமை போல இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு கடவுச்சீட்டை பெற்றுக் கொள்வதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு செல்வோரிடம் நிதி மோசடியில் ஈடுபடுபவர்கள் தொடர்பிலான தகவல்கள் அண்மையில் வெளிச்சத்திற்கு வந்திருந்தது.

இதனையடுத்தே, வெளிநாட்டு கடவுச்சீட்டை பெற்றுக் கொள்வதற்கான குறித்த இலகு வழி வேலைத்திட்டத்திற்கான யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. நேற்று முதல் அமுலுக்கு வரும் இந்த நடைமுறையால், நிதி மோசடியைத் தவிர்த்துக் கொள்ளமுடியும் என்பதோடு, பொது மக்களுக்கும் இது பாரிய நன்மையாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாலிப கிண்ண தொடர்

# அளவெட்டி மத்தி, கல்வியங்காடு பாபா போய்ஸ் அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தகுதி





இளவாலை வருத்தப் படாத வாலிபர் சங்கம் தனது 10 ஆவது ஆண்டை முன் னிட்டு நடத்தி வருகின்ற 48 அணிகள் பங்கேற்கின்றன. மாபெரும் துடுப்பாட்ட போட்டி யில் முதலாவது காலிறுதி போட்டியில் கல்வியங்காடு GPS அணியை எதிர்த்து அளவெட்டி மத்தி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கல்வியங்காடு GPS அணி யினர் நிர்ணயிக்கப்பட்ட 6 பந்து பரிமாற்றத்தில் 74 ஓட்டங்களை பெற்றது. துடுப் பாட்டத்தில் கண்ணன் 31 ஓட்டங்களை பெற்றார் .

பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய அளவெட்டி மத்தி அணியினர் 4.5 ஓவர்களில் 3 இலக்குகள் இழந்து இப் போட்டியில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழை ந்தது. துடுப்பாட்டத்தில் யசி 33 ஓட்டங்களை பெற்றார் .

இரண்டாவது காலிறுதி போட்டியில் கல்வியங்காடு பாபா போய்ஸ் அணியை எதிர்த்து அளவெட்டி GJ United அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி GJ United அணியினர் நிர்ணயிக் கப்பட்ட 6 பந்து பரிமாற்ற த்தில் 5 இலக்குகளை இழ ந்து 83 ஓட்டங்களை பெற் றது. துடுப்பாட்டதில் ரகுவரன் 49 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் வித்தகன் ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 2 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய கல்வியங்காடு பாபா போய்ஸ் அணியினர் 4.3 ஓவர்களில் விக்கெட் இழப் பின்றி 88 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்று அரை யிறுதிக்குள் நுழைந்தது. துடுப்பாட்டத்தில் மயூரன் ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங் களையும் அஜய் ஆட்டமிழக் காமல் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

அரையிறுதிப் போட்டி நாளை சனிக்கிழமை இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக் கது. (4-6)

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் அட்டவணை வெளியீடு

மூன்றாவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிக்கான அட்டவணையை ஐ.சி.சி. நேற்று வெளியிட்டது. இதில் இந்தியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென் ஆப்பி ரிக்கா, இலங்கை, வெஸ்ட் இண்டீஸ், வங்காளதேசம் ஆகிய 9 அணிகள் பங்கேற் கின்றன. ஒவ்வொரு அணி யும் உள்நாட்டில் 3 தொடர், வெளிநாட்டில் 3 தொடர் என்ற அடிப்படையில் 6 டெஸ்ட் தொட ரில் விளையாட உள்ளன. மொத்தம் 27 தொடர்களில் 68 டெஸ்டுகள் இதில் அடக் கம்.

2023 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை நடைபெறும் இந்த தொடரின் முடிவில் யார் அதிக புள்ளிகள் பெற்று முதல் இரு இடங்களைப் பிடிக்கி றார்களோ அவர்கள் இறுதிப் போட்டியில் மோதுவார்கள்.

இறுதியாக நடந்த போட் டியில் ஆஸி அணி டெஸ் சம்பியன்ஷிப்பை கைப்பற் றியது குறிப்பிடத்தக்கது. (4)




# ஐ.சி.சியின் சிறந்த டெஸ்ட் வீரர்; முதல் 3 இடங்களில் ஆஸி. வீரர்கள்

சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்ட சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்க ளுக்கான தரவரிசைப் பட்டி யலில் முதல் 3 இடங்களைப் பிடித்து அவுஸ்திரேலிய வீரர் கள் சாதனை படைத்துள் ளனர்.

அந்த வகையில் மார ன்ஸ் லபுசேன் 903 புள்ளி களுடன் முதல் இடத்திலும் ஸ்டீவ் ஸ்மித் 885 புள்ளி களுடன் 2ஆவது இடத்தி லும் டிராவிஸ் ஹெட் 884 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.

39 ஆண்டுகளுக்கு பின் னர் ஒரே அணியைச் சேர் ந்த மூன்று துடுப்பாட்ட வீரர் கள் முதல் மூன்று இடங்க ளைப் பிடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# லங்கா பிரீமியர் லீக் ஏலத்தில் புறக்கணிக்கப்பட்ட ரெய்னா

இந்திய அணியின் முன் னணி இடது கை பேட்ஸ் மேனாக இருந்தவர் சுரேஷ் ரெய்னா. இவர் ஐ.பி.எல் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக அபார மான ஆட்டத்தை வெளிப்ப டுத்தியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் மற் றும் உள்ளூர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற ரெய்னா, இலங்கையில் நடைபெற இருக்கும் லங்கா பிரீமியர் லீக்கில் விளையாட விரும்பி னார். இதனால் ஏலத்தில் பங்கேற்க விண்ணப்பம் செய்தார். ஏலத்தில் இடம் பெறும் வீரர்களின் பட்டியலில் அவரது பெயர் இடம் பெற்றது. நேற்று முன்தினம் ஏலம் நடைபெற்றது.

ஒவ்வொரு வீரர்களின் பெயர்களையும் ஏலம் விடுப வர் வெளியிட்டு ஏலத்தை ஆரம்பித்தார். ஆனால், சுரேஷ் ரெய்னாவின் பெயரை அவர் வெளியிடவில்லை. சுரேஷ் ரெய்னா பெயர் புறக்கணிக் கப்பட்டது. இது ரசிகர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியு ள்ளது. ஏலம் விடும்நபர் தவறுதலாக சுரேஷ் ரெய்னா பெயரை தெரிவிக்காமல் விட் டாரா? அல்லது சுரேஷ் ரெய்னா ஏலத்தில் இருந்து விலகினாரா? என்பதை சுரேஷ் ரெய்னா வும் லங்கா பிரீமியர் லீக் நிர் வாகமும் வெளிப்படுத்தினால் தான் தெரியவரும். (4)

# அறிமுக டெஸ்டிலேயே 5 விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்



ஆப்கானிஸ்தான் அணி யின் வேகப்பந்து வீச்சாளர் நிஜத் மசூட் அறிமுக டெஸ்டில் 5 விக்கெட்டுகளை சாய்த்தார்.

வங்கதேசம் மற்றும் ஆப் கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டி டாக்காவில் நேற்று முன்தினம் தொடங்கியது. தொடக்க வீரர் ஹசன் ஜோய் 76 ஓட்டங் களில் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து, சதம் விளாசிய நஜ்முல் ஷாண்டோ 146 ஓட்டங்க்ள் குவித்து ஆட்ட மிழந்தார்.

அனுபவ வீரர் முஷ்டபிசுர் ரஹிமை 47 ஓட்டங்களில் அறிமுக வேகப்பந்து வீச்சா ளர் நிஜத் மசூட் வெளியேற்றி னார்.

அதன் பின்னர் கடைசி இரண்டு விக்கெட்டுகளை யும் அவரே கைப்பற்றினார். இதனால் வங்கதேசம் 382 ஓட்டங்களுக்கு ஆல்அவுட் ஆனது. நிஜத் மசூட் தனது அறிமுக டெஸ்ட் போட்டியி லேயே 5 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதன்மூலம் இந்த சாத னையை செய்த இரண்டா வது ஆப்கான் வீரர் என்ற பெருமையை அவர் பெற் றார். முன்னதாக, 2019 ஆம் ஆண்டில் அமிர் ஹம்சா தனது முதல் போட்டியில் 5 விக்கெட்டுகள் கைப்பற்றியி ருந்தார். (4)

# இளையோர் வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப்பில் மலேசியாவை எதிர்த்தாடவுள்ள இலங்கை



தென் கொரியாவின் ஜியொஞ்சி விளையாட்ட ரங்கில் நடைபெற்றுவரும் 11 நாடுகளுக்கு இடையி லான 12 ஆவது ஆசிய இளையோர் 21 வயதுக் குட்பட்ட வலைபந்தாட்ட சம் பியன்ஷிப் அரை இறுதிப் போட்டியில் விளையாடுவ தற்கு இலங்கை தகுதி பெற்று ள்ளது.

சைனீஸ் தாய்ப்பே அணி க்கு எதிராக நேற்று முன் தினம் புதன்கிழமை நடை பெற்ற பி குழுவுக்கான கடைசி லீக் போட்டியில் 83 - 17 என்ற கோல்கள் கணக்கில் இல ங்கை வெற்றி கொண்டு அரை இறுதி வாய்ப்பை உறுதிசெய்துகொண்டது.

இன்று நடைபெறவுள்ள ஒரு அரை இறுதிப் போட்டி யில் நடப்பு சம்பியனும் பலம் வாய்ந்ததுமான மலேசி யாவை இலங்கை எதிர்த் தாடவுள்ளது.

சிங்கப்பூருக்கு எதிரான போட்டியில் மிக மோசமாக விளையாடி தனது முதலா வது தோல்வியைத் தழுவிய இலங்கை, சைனீஸ் தாய்ப் பேயுடனான போட்டியில் திறமையாக விளையாடி வெற்றி பெற்றது குறிப்பிடத் தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு கடன்களை மறுசீரமைப்பது பெரும் சவாலாக உள்ளது

### ரஞ்சித் சியாம்பலாபிட்டிய



(கொழும்பு)

வாகன இறக்குமதிக்கு பல முறைகள் சிந்தித்து செயற்பட வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடன்முறையின் மூலம் வாகனங்களை இறக்குமதி செய்ய யோசனை முன்மொழியப்பட்டுள்ளது. எனினும் நாடு இன்னும் கடன் நெருக்கடியிலேயே இருக்கின்றது. வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதே பெரும் சவாலாக இருக்கின்றது. இவ்வாறான நிலையில் கடன் முறை மூலம் வாகனங்களை இறக்குமதி செய்வது பரிசீலிக்கப்பட்டு செய்ய வேண்டிய விடயம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# வடக்கு - கிழக்கில்

## மீண்டும் மலேரியா அச்சுறுத்தல்

### சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

(கொழும்பு)


**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஆறு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் மீண்டும் மலேரியா அச்சுறுத்தல் குறித்து சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

இதற்கமைய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மலேரியா நுளம்புகளின் தாக்கம் இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை உட்பட அம்பாறை மாவட்டத்திலுள்ள, அக்கரைப்பற்று, திருக்கோவில், ஆலையடி வேம்பு மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய இடங்களில் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2016 டிசம்பர் முதல் 2017 ஏப்ரல் வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் 2016 ஆம் ஆண்டு மன்னாரிலும் அதன் பின்னர் வடமாகாணத்தின் யாழ், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் முதன்முதலில் மலேரியாவை பரப்பும் நுளம்புகள் கண்டறியப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



கடந்த 18.05.2023 வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவன்

அமரர்

**கிருஷ்ணபிள்ளை சிவகுமார்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 17.06.2023 சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று கீரிமலைப் புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். தொடர்ந்து 11.00 மணியளவில் இடம்பெறும் சபிண்டிகரண கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

காரைவட்டம்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C-6743)


# இலங்கையில் அணுமின் நிலையம் அமைக்க ரஷ்யா திட்டம்

### ஆய்வு செய்கிறது சர்வதேச அணுசக்தி நிறுவனம்

(கொழும்பு)

இலங்கையில் அணுமின் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான ரஷ்யாவின் திட்டங்களை சர்வதேச அணுசக்தி நிறுவனம் ஆய்வு செய்து வருகிறது. ரஷ்ய அரச அணுசக்தி கூட்டுத்தாபனமான Rosatom இலங்கையில் அணுமின் நிலையத்தை அமைக்க உதவும் என்று முன்னதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் இந்தத் திட்டம் நாட்டின் அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்டு தற்போது சர்வதேச அணுசக்தி நிறுவன நிபுணர்களால் ஆய்வு செய்யப்பட்டு வருவதாக ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவர் ஜனிதா லியனகே தெரிவித்துள்ளார்.

அவரது கூற்றுப்படி, அணுமின் நிலையத்தை மிதக்க வைப்பதா அல்லது நிலத்தில் நிர்மாணிப்பதா? என்பது பற்றிய விவாதம் தற்போது இடம்பெற்று வருகிறது.

அணுமின் நிலையங்களில் பணிபுரியும் நிபுணர்களுக்கான பயிற்சிகளை ரஷ்யாவின் ரஷ்ய அரச அணுசக்தி கூட்டுத்தாபனம் வழங்கும். இந்தநிலையில் இலங்கையில் நிலவும் எரிசக்தி பற்றாக்குறை பிரச்சினையை அணுசக்தியால் மட்டுமே தீர்க்க முடியும்.

அத்துடன் குறித்த அணு மின்சார நிலையத்தின் உற்பத்தி நிலையத்தின் திறன் 300 மெகாவோட்டாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# இராசிபலன்

16.06.2023
ஆனி 01, வெள்ளிக்கிழமை
திரியோதசி முற்பகல் 9.43 மணிவரை

கார்த்திகை பிற்பகல் 4.13 மணிவரை
சுபநேரம் -5.53-7.23 மணிவரை
இராகுகாலம்-10.23-11.53 மணிவரை

சந்திராஷ்டமம் - சித்திரை, சுவாதி

வளவன்

**மேஷம்:** காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், பணப்புளக்கம் அதிகரிக்கலாம்.

**கடகம்:** மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை எளிதில் செய்து முடிப்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**துலாம்:** ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, மறதியால் ஒரு சில பணிகளை செய்யாமல் விட்டுவிடுவீர்கள், கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள்.

**மகரம்:** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்:** வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், போசன சுக முண்டு.

**சிம்மம்:** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பணியில் தீவிரம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுபதகவல்கள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.

**மிதுனம்:** எடுத்த காரியத்தை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம்.

**கன்னி:** வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.

**தனுசு:** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள்.

**மீனம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

அவசரங்களில் செய்யப்பட்ட சபதங்கள் அமைதியில் மறக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டு. கண்ணலிங்கேஸ்வர ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை- தெக் கணப்பாய் கண்ணகாம்பிகை சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மஹோற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை நண் பகல் 11.30 மணிக்கு தீர்த்த திருவிழாவும் அன்று மாலை 6.30 மணிக்கு கொடியிறக்க மும் இடம் பெறும். (4-6)

# கசிப்புடன் ஒருவர் கைது

(அராலி)

அச்சுவேலி பொலிஸ் பிரி விற்குட்பட்ட மாசுவன் சந்தியில் வைத்து கசிப்புடன் ஒருவர் நேற்றுக் காலை கைது செய்ய ப்பட்டார்.

அச்சுவேலி பகுதியில் இருந்து ஊரெழு பகுதிக்கு 3000 மில்லிலீற்றர் கசிப்பினை எடுத்துச் சென்றவேளை அவர் இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளார். காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்த ப்பட்டதோடு குறித்த நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற் படுத்துவதற்கான நடவடிக் கைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (4)

# இராஜ கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டு விழா

(அராலி)



மானிப்பாய் சாவல் கட்டு அந்திக் குழி ஞான வைரவர் ஆலயத்தில் புதிதாக நிர் மாணிக கப்படவுள்ள நூறு அடி உயரமான இராஜ கோபு ரத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று காலை இடம் பெற்றது.

ஆலய பிரதம குரு தலை மையில் இடம்பெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் பிரதம விரு ந்தினராக கலந்து கொண்டு இராஜகோபுரத்துக்கான அடிக் கல்லை சம்பிரதாயபூர்வமாக நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சாவல்கட்டு வட்டார அமைப்பாளர் ந.கவிச் சந்திரன் மற்றும் ஆலய நிர் வாகத்தினர் ஆகியோரும் கலந்து கொண்டு இராஜ கோபுரத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தனர். (4-6-104)

# செய்தியாளர் ஊடக தூது மடல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

செய்தியாளர் ஊடக தூதுமடல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 11 மணிக்கு யாழ். 23-25 பெரிய தோட்டம் - பீச் றோட், பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம் விரு ந்தினராக யாழ். பல்கலை க்கழக கலைப்பீடாதிபதி மற்றும் மேனாள் ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் பேராசிரியர் சி. ரகுராம், சிறப்பு விருந்தி னர்களாக வலம்புரிப் பத்தி ரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், யாழ். பல் கலைக் கழக மேனாள் ஊடக விரிவுரையாளர் கிருத்திகா தர்மராஜா, மூத்த ஊடகவிய லாளர் பாரதி இராஜநாயகம் மற்றும் பாசையூர் புனித அந் தோனியார் றொறென்ரோ கனடா அமைப்பின் தலைவர் செபஸ்தியாம்பிள்ளை மைக் கல்தாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)

# தரம் பெற்ற அதிபர் சங்க
## வடக்கு மாகாண சம்மேளனக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தரம் பெற்ற அதிபர் சங் கத்தின் வடக்கு மாகாண சம்மேளனக் கூட்டம் எதிர் வரும் 19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபா லிங்கம் மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த அதிபர் சங்கங்களின் பிரதிநிதி களும் கலந்து கொள்கின்ற னர்.

வடக்கில் அதிபர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொட ர்பாக ஆராயப்படவுள்ளதுடன் நிர்வாகக் கட்டமைப்பும் உரு வாக்கப்படவுள்ளது.

எனவே வடக்கு மாகா ணத்தில் பணியாற்றும் அனை த்து தரம் பெற்ற அதிபர்களும் இந்த கூட்டத்தில் கலந்து கொள் ளுமாறு தரம் பெற்ற அதிபர்கள் சங்க செயலாளர் அறிவித் துள்ளார். (4)



திருமுறிகண்டி பிள்ளை யார் கோயிலுக்கு அண் மித்ததாக அமைக்கப்பட்ட, அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வன்னி அலுவலக் வளாகம் கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது.

# உடைமையில் ஹெரோயின் மல்லாகத்தில் ஒருவர் கைது

(அராலி)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்லாகம் சந்தி பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளார்.

ஏழாலை பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஆணொருவர் ஒரு கிராம் 380 மில்லிக் கிராம் ஹெரோயினை எடுத்துச் சென்றவேளை, காங்கேசன் துறை மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள் ளார்.

இவ்வாறு கைது செய்யப் பட்ட சந்தேகநபர் தெல் லிப்பழை பொலிஸ் நிலை யத்தில் பாரப்படுத்தப்பட்ட தோடு குறித்த நபரை மல் லாகம் நீதிமன்றத்தில் முற் படுத்துவதற்கான நட வடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (4-6-104)



வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சாரணர் துருப்புக்க ளுக்கான கூடாரங்கள் பழைய மாணவனான அருணாசலம் ஆதித்தனின் அன்பளிப்பு பிரதி அதிபர், சாரணர் பொறுப்பாசிரியர் மற்றும் சாரணர்களிடம் உத்தியோக பூர்வமாக நேற்றுக் கையளிக்கப்பட்டது. (படங்கள் - கஜிந்தன்)

# ஆசிரியர் கலாசாலை
## நூற்றாண்டுத் தொடக்க விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நூற்றாண்டுத் தொடக்க விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம் பெறும்.

இவ் நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவான ந்தா சிறப்பு விருந்தினராக வட மாகாண கல்விப் பணி ப்பாளர் தி.ஜோன்குயின்டஸ் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (4-6)

# திடீரென தீப்பற்றிய மின்மாற்றி கட்டுப்படுத்திய மின்சாரசபை



(கரணவாய்)

வடமராட்சி மந்திகை சந்தியில் உள்ள மின் மாற்றி யில் பொருத்தப்பட்டிருந்த மின் மானி அலகு பெட்டி தீப்பற்றி யதால் அப்பகுதியில் பரபரப் பான சூழ்நிலை ஏற்பட்டது.

நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை குறித்த தீப் பரவல் ஏற்பட்டதை அவதா னித்த அருகிலுள்ள வர்த்த கர்கள் விரைந்து மின்சார சபை அலுவலகத்திற்கு அறிவித் ததை அடுத்து அங்கு விரைந்து சென்ற இலங்கை மின்சார சபை அதிகாரிகள் மின்சார த்தை உடனடியாகவே துண்டி த்து தீயை அணைத்தனர் மின் மானி அலகு பெட்டியை சீர் செய்து 15 நிமிடத்தில் குறித்த மின் தடங்கலை சீர் செய்த னர். (4-6-60)




சிங்கர் நிறுவனத்தினால் லிமா எலக்ட்ரிக் மோட்டார் சைக்கிள் அறிமுகம் செய்யும் நிகழ்வு யாழில் உள்ள தனியார் விடுதியில் நேற்று மாலை இடம்பெற்றது. குறித்த நிறுவனத்தின் நீண்ட கால வாடிக்கையாளர் ஒருவருக்கு எலக்ட்ரிக்-மோட்டார் சைக்கிளின் திறப்பு வழங்கி வைக்கப்பட்டது. (படம்-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஆணையுள்ள அரசு வேண்டுமெனில் பாராளுமன்றத்தை உடனடியாக கலையுங்கள்

## சஜித் பிரேமதாச வலியுறுத்து



**(கொழும்பு)**

**மக்கள் ஆணை உள்ள அரசை நிறுவ வேண்டுமெனில் பாராளுமன்றத்தை ஜனாதிபதி உடனடியாகக் கலைத்துத் தேர்தலை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

ரணில்-மொட்டு உறவு சிதைவடைந்து விட்டது. அத்னால் அவர்கள் தலைமையிலான அரசும் செயலிழந்து விட்டது. ஏற்கனவே மக்கள் ஆணையை இந்த அரசு இழந்துள்ள நிலையில், செத்த பிணமாகவே ஆட்சி தொடர்ந்தது. அதுவும் இப்போது முடிவுக்கு வந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மொட்டுக் கட்சியினர் சிறிதளவும் மதிக்கின்றார்கள் இல்லை. அதனால் தான் அவர் தலைமையிலான கூட்டத்தை மொட்டின் உறுப்பினர்கள் புறக்கணிக்கின்றார்கள். இது ஜனாதிபதிக்கு வெட்கக்கேடு. எனவே, மக்கள் ஆணை உள்ள அரசை நிறுவ வேண்டுமெனில் பாராளுமன்றத்தை ஜனாதிபதி உடனடியாகக் கலைத்துத் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (நி)

# எமது ஆதரவு ரணிலுக்கே பெரமுன தலைவர்கள் உறுதி

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்திக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்துக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இணக்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இதற்கான இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ, பொதுச் செயலாளர் சாகர காரியவசம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் டிரான் அலஸ், அமைச்சர் ஜீவன் தொண்டமான், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா உள்ளிட்டோர் சந்திப்பில் பங்கேற்றுள்ளதாக தெரிய வருகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குத் தெரியாமல் அரச நிகழ்ச்சிகளுக்கு தமது உறுப்பினர்களை அழைப்பது பொருத்தமற்றது என அக்கட்சியின் தலைவர்கள் அங்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

அண்மையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்காமல் மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கான விசேட கூட்டத்துக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாவட்ட தலைவர்களின் பிரதிநிதிகளை ஜனாதிபதி அழைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# 1300 லீற்றர் எதனோல் கடத்தல்

## ஒருவர் கைது

(கொழும்பு)

அனுமதிப்பத்திரம் இன்றி எதனோல் கடத்திய குற்றச் சாட்டில் எகொட உயன பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏழு பெரல்களில் 1,300 லீற்றருக்கும் அதிகமான எதனோலை எகொட உயன பிரதேசத்தில் லொறி ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டுக் கொண்டிருந்த போதே கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபரிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# பெரமுனவின் உள்ளக விடயங்களில் ஜனாதிபதி தலையிடக் கூடாது

## வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் சுதந்திரம் மற்றும் அடையாளத்துடன் தொடர்புபட்ட விடயங்களில் தலையிடக் கூடாது என அந்தக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுடன் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்திப்பொன்றை நடத்தியிருந்தார்.

எனினும், குறித்த சந்திப்பு உத்தியோகபூர்வமற்ற ரீதியில் நடைபெற்றதாக கட்சியின் சில உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளக விடயங்களில் ரணில் விக்கிரமசிங்க தலையிடக் கூடாது என அந்தக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனை தொடர்ந்து, குறித்த கோரிக்கைக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததாக கட்சியின் அரசியல் வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 15 1/2<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: தொழில் நுட்ப உத்தியோகத்தர் அரச, தனியார் தொழில்<br>தொ.இ: B/13591 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 12 இல் சூரி. செவ்<br>கி.பா: 42 1/2<br>உயரம்: 156 Cm<br>தகைமை/தொழில்: B.Sc (Hons) Marketing excutive<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/13719 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 160 Cm<br>தகைமை/தொழில்: A/L சொந்தக்கடை<br>படித்த பெண்<br>தொ.இ: B/13592 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 10<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்: BBM<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்.<br>தொ.இ: G/13723 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 6 இல் சூரி. செவ்<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்: G.C.E A/L<br>நடத்துனர் CTB<br>தொ.இ: B/13594 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 47 1/2<br>உயரம்: 164 Cm<br>தகைமை/தொழில்: HND<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, உயர் பதவி<br>தொ.இ: G/13732 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1 இல் சூரி. செவ்<br>தகைமை/தொழில்: A/L முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/13598 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 29<br>உயரம்: 5' 3"<br>தகைமை/தொழில்: HNDIT<br>எதிர்பார்ப்பு: படித்த, தொழில் புரியும் வரன், வெளிநாடு.<br>தொ.இ: G/13739 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 148

### யாசகனும் தங்க நாணயங்களும்

யாசகர் ஒருவர் உணவுக்காக வீடு வீடாக அலைந்து திரிந்தான். அவரின் தோற்றம் கிழிந்த உடைகளோடு, சிக்குப் பிடித்த தலை முடியுமாகக் காணப்பட்டது. ஒரு பழைய கோணிப்பையே அவருக்கு உடமையாக இருந்தது.

ஒவ்வொரு வீடாகப் போய் பார்த்து விட்டு எதுவும் கிடைக்காவிட்டால் தனக்குள் அந்த வீட்டைப் பற்றி சொல்லிக் கொள்வான். ஒரு வீட்டின் முன்னே போய் சொன்ன வார்த்தைகள் வீடு மிகப் பெரியது. ஆனால் இங்குள்ளவர்களுக்குப் பணம் நிறைய இருந்தும் திருப்தி இல்லை. அவர்கள் எப்போதும் அதிகமாகவே எதிர்பார்க்கிறார்கள். கடைசியில் அவர்கள் பேராசையால் எல்லாவற்றையும் இழப்பார்கள்..."

இன்னொரு வீட்டுக்குப் போனான். உணவு கிடைக்கவிலை. "இந்த வீட்டில் உள்ளவன் கோடீஸ்வரன். ஆனால் இருக்கிற பணத்தில் திருப்தியடையாமல் அவற்றை இரட்டை மடங்காக்க சூதாடினான். கடைசியில் எல்லாவற்றையும் இழந்தான். எனக்கோ கொஞ்சப் பணம் கிடைத்தால் போதும். திருப்தி கொள்வேன். அதிக ஆசைப் படமாட்டேன்!" என்று அந்த யாசகர் சொன்னதும் அதிர்ஷ்ட தேவதை அவன் முன்னே தோன்றியது.

"நான் உனக்கு உதவப் போகிறேன். நீ உன்னுடைய கோணிப்பையைப் பிடி. நான் அதனுள்ளே தங்க நாணயங்கள் போடுவேன். உனக்கு எவ்வளவு வேண்டுமோ பெற்றுக் கொள்" எனக் கூற, யாசகனோ அதிர்ஷ்ட தேவதையின் அதன் கரங்களில் உள்ள தங்க நாணயங்களை வியர்ந்து பார்த்தான். உடனே அவன் கோணிப்பையை விரிக்க. அப்போது அதிர்ஷ்ட தேவதை சொல்லியது: "கோணிப்பைக்குள் விழுகின்ற நாணயங்கள் தங்கமாக இருக்கும். அவை நிலத்தில் விழுந்தால் தூசியாகி விடும்.

இது எனது எச்சரிக்கை என்று சொல்ல" யாசகன் மிகுந்த மகிழ்ச்சியோடு இருந்தான். அதிர்ஷ்ட தேவதை மீண்டும் எச்சரித்தது. அதன் பிறகு யாசகனின் கோணிப்பைக்குள் தங்க நாணயங்களைக் கொட்டியது. கோணிப்பை நிரம்பியதும் தேவதை தங்க நாணயங்களைக் கொட்டுவதை நிறுத்தியது. "உன் கோணிப்பையில் இருக்கிற நாணயங்கள் உன்னை அரசனை விட பணக்காரனாக்கும். அது போதும்தானே?" என்றது அதிர்ஷ்ட தேவதை. "போதாது. இன்னும் வேண்டும்" என்றான் அந்த யாசகன்.

அதிர்ஷ்ட தேவதை மேலும் சில தங்க நாணயங்களைக் கொடுத்து விட்டு சொன்னது, "உன் கோணிப்பை இதற்கு மேல் தாங்காது". யாசகன் சொன்னான்... "இன்னும் கொஞ்சம் வேண்டும்".... அதிர்ஷ்ட தேவதை மேலும் தங்க நாணயங்கள் சிலவற்றைக் கொடுத்துவிட்டு நிறுத்தியது.

"உன் கோணிப்பை கிழியப் போகிறது...". யாசகன் மறுத்தான். "இல்லை... நீ இன்னும் கொஞ்சம் நாணயங்கக்களைப் போடு! என் கோணிப்பை தாங்கும்..." மறு வினாடி கோணிப்பை கிழிந்தது. அதனுள் இருந்த நாணயங்கள் கீழே விழுந்து தூசியாகின. அதிர்ஷ்ட தேவதையும் மறைந்தது. யாசகன் திகைத்துப் போய் நின்றான்.

இது கதைதான் ஆனால், இதில் மனிதனின் பேராசை என்னும் உலக ஆசை , பொருள் ஆசை , செல்வம் ஆசை, பொன்னாசை, அதைவிட மனிதனின் மரணம் தான் மனிதனின் ஆசைக்கு முற்றுப்புள்ளி.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## பிறந்த நாளில் கைது செய்யப்பட்ட ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்க அரசின் ரகசிய ஆவணங்களை எடுத்து சென்ற வழக்கில் கைதுசெய்யப்பட்டிருந்த அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிட்ட ட்ரம்ப், தோல்வியைத் தழுவிய நிலையில் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறி புளோரிடாவில் உள்ள தனது வீட்டில் குடியேறினார்.

இதன்போது ட்ரம்ப் நூற்றுக்கணக்கான இரகசிய ஆவணங்களை ஆவணக் காப்பகத்திடம் ஒப்படைக்காமல் தன்னுடன் எடுத்து சென்றதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில்கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் புளோரிடாவில் உள்ளட்ரம்பின் வீட்டில் மத்திய புலனாய்வு பொலிஸார் அதிரடி சோதனையொன்றை நடத்தினர்.

இதன்போது ட்ரம்ப் வீட்டின் குளியலறையில் இருந்து 100 இற்கும் மேற்பட்ட அமெரிக்க அரசின் இரகசிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. எனினும் இது பைடன் அரசின் பழி வாங்கும் நடவடிக்கை என ட்ரம்ப் சாடினார்.

இந்நிலையில் சட்ட விரோதமாக அரசு ரகசியங்களை எடுத்துச் சென்றுவிட்டு, அவற்றை அரசு மீண்டும் திரும்பப் பெறமுடியாத அளவுக்கு அழித்துவிட முயன்றார் என்பது உட்பட ட்ரம்ப் மீது 37 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில் நேற்று முன்தினம் அவரது 77 ஆவது பிறந்த நாளில் இவ் வழக்கு தொடர்பான விசாரணைக்காக மியாமி நீதிமன்றத்தில் ஆஜரானார்.

இதன்போது இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மற்றொரு நபரான ட்ரம்பின் முன்னாள் உதவியாளர் வால்ட் நவுடாவும் ஆஜரானார்.

அவர்கள் இருவரையும் மியாமி நகர பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களது கை ரேகைகள் டிஜிட்டல் முறையில் பதிவு செய்யப்பட்டன. அதே சமயம் ட்ரம்ப் வகித்த உயர் பதவியை கருத்தில் கொண்டு அவருக்கு கை விலங்கு பூட்டப்படவில்லை.

தொடர்ந்து நடந்த விசாரணையின் போது ட்ரம்ப் தன் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளையும் ஏற்க மறுத்து தான் குற்றமற்றவர் என வாதிட்டார்.

இதையடுத்து அரசு தரப்பின் வாதங்களையும் கேட்ட நீதிபதி, ட்ரம்ப் மற்றும் வால்ட் நவுடா ஆகிய இருவருக்கும் எந்தவித நிபந்தனையும் இன்றி பிணை வழங்கி விடுவித்தார்.

அத்துடன் ட்ரம்ப் தனது முன்னாள் உதவியாளர் வால்ட் நவுடாவிடம் இந்த வழக்கு குறித்து நேடியாக ஆலோசனை நடத்த தடை விதித்த நீதிபதி விசாரணையை ஒத்திவைக்க உத்தரவிட்டார்.(நி)

## பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்

(மணிலா)

பிலிப்பைன்ஸின் பிரதான தீவில் நேற்று 6.3 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்நிலையில் தலைநகர் மணிலாவில் சில ரயில் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

10 கிலோமீற்றர் (6.21 மைல்) ஆழத்தில் கடலில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்திற்குப் பிறகு உயிரிழப்பு அல்லது பெரிய சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று பிலிப்பைன்ஸ் நில அதிர்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம் காரணமாக மணிலாவில் உள்ள மூன்று உயர்த்தப்பட்ட ரயில் பாதைகளின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டதாக போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி)

## மேற்கத்தை...

## உக்ரைனு...

## புடின்...

(மொஸ்கோ)

"உக்ரைனுடன் அ...
ஆனால் அதற்கு ம...
மேற்கத்தேய நாடு...
விளாடிமிர் புடின் நி...

நேட்டோ படையுடன் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரஷ்யா கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் உக்ரைன் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது.

## உக்ரைன் மீது ...
## பயன்படுத்த ...

### பெலாரஸ் ஜனாதிபதியின் ...



(பெலாரஸ்)

"தேவை ஏற்படின் உக்ரைன் மீது அணு ஆயுதங்களைப் பயன்படுத்தவும் ரஷ்யா தயங்காது" என பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே இடம்பெற்றுவரும் போரானது தற்போது தீவிரமடைந்து வருகி...

## கொல்கத்தா விமான நிலைய...

(டில்லி)

இந்தியாவின்கொல்கத்தாநேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் விமான நிலையத்தில் விமானநிலையத்திற்குள் பாரிய தீ மூண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின்றன

பயணிகள் புறப்படும் பகுதிக்குள் தீமூண்டுள்ளது. இதுவரை எவருக்கும்...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...தைய நாடுகள் ஆயுதம் வழங்குவதை நிறுத்தினால்

# ...ரனுடன் பேச்சுவார்த்தைக்குத் தயார்

## ...ன் அதிரடி அறிவிப்பு



(...கா)

**...வுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தத் தான் தயார். ...தற்கு மாறாக உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்குவதை ...ய நாடுகள் நிறுத்த வேண்டுமென்று" ரஷ்ய ஜனாதிபதி ...புடின் நிபந்தனையொன்றை விதித்துள்ளார்.**

அதே சமயம் உக்ரைனும் அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளின் உதவியோடு பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக இரு நாடுகளுக்கு இடையேயும் இடம்பெற்று வரும் போரானது உக்கிரமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த செவ்வாய்க் கிழமை மொஸ்கோவில் இடம்பெற்ற இராணுவ சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "ரஷ்ய ஆயுதங்களின் தரம் தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் அமெரிக்கா வழங்கிய ஹிம்மர் ரொக் கெட்டுகள் மூலம் ககோவ்கா அணையை உக்ரைன் தகர்த்துள்ளதாக குற்றம்சாட்டிய புடின், எதிர்த்தாக்குதலை தீவிரப்படுத்தியபிறகு ரஷ்யாவுடன் ஒப்பிடுகையில் உக்ரைனுக்கு 10 மடங்கு உயிரிழப்பு அதிகமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (நி)

# ...மீது அணு ஆயுதங்களை ...த்த ரஷ்யா தயங்காது

## ...தியின் அறிவிப்பால் அதிர்ச்சியில் உலக நாடுகள்



...ன்றது.

இந்நிலையில் பெலாரஸின் ஜனாதிபதியும் ரஷ்ய ஜனாதிபதியின் நெருங்கிய நண்பருமான அலெக்சாண்டர் லுகாஷென்கோ தெரிவித்துள்ள இக்கருத்தானது உலக நாடுகளை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எனது நாட்டின் மீது ஆக்கிரமிப்பு ஏதேனும் நடந்தால், அணு ஆயுதங்களைப் பயன்படுத்தவும் நாம் தயங்க மாட்டோம்.

அணு ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டிய ஒரு அவசியத்தை கடவுள் ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும்.

ஆனால் எங்கள் நாட்டின் மீது ஆக்கிரமிப்பு நடந்தால் அதை எதிர்கொள்ள நாங்கள் தயங்க மாட்டோம்.

ரஷ்ய ஜனாதிபதி புடினை எமது நாட்டில், தந்திரோபாய அணு ஆயுதங்களை நிலைநிறுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். தனது நாட்டின் மீது தாக்குதல் நடக்க அதிகளவான சாத்தியக்கூறுகள் இருப்பதால் இதனைச் செய்தாகவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்"

இவ் அறிவிப்பானது உலக நாடுகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# படகு கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் சுமார் 100 பேர் உயிரிழப்பு

## திருமணத்தில் பங்கேற்றுவிட்டு திரும்பும் போது நைஜீரியாவில் சோகம்

(நைஜர்)

படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த சம்பவம் நைஜீரியாவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



குவாரா பகுதியில் திருமண நிகழ்வொன்றில் பங்கேற்றுவிட்டு நேற்று முன்தினம் அதிகாலை படகில் வீடு திரும்பியவர்களே. இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவ் விபத்தில் 100 பேர் வரை இறந்திருக்கக் கூடும் எனத் தெரிவித்த நைஜீரிய அதிகாரிகள் பலரைக் காணவில்லை எனவும் அவர்களை மீட்கும் பணியில் தொடர்ந்து தாம் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச் சென்றமையே இவ் விபத்துக்கான காரணம் என விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது. (நி)

# அகதிகள் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 78 பேர் உயிரிழப்பு-104 பேர் மீட்பு

கிரீஸ் அருகே அகதிகள் படகு கவிழ்ந்த விபத்தில் 78 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் தெரிவித்த கிரீஸ் கடலோர காவல்படை அதிகாரிகள், "கிரீஸ் கடற்கரையில் இருந்து 47 நாட்டிகல் மைல் தொலைவில் அகதிகள் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

கடல் சீற்றம் காரணமாக இந்த விபத்து நேரிட்டுள்ளது. இந்தப் படகில் வந்தவர்களில் குறைந்தபட்சம் 78 பேர் உயிரிழந்தனர். விபத்துக்குள்ளான படகிலிருந்து 104 பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும், உயிர் பிழைத்தவர்களில், 4 பேர் தாழ்வெப்பநிலை அறிகுறிகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடல் சீற்றம் காரணமாக மீட்புப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதனால், கடலில் மூழ்கியவர்கள் குறித்த சரியான தகவல் இன்னும் உறுதியாக வில்லை.

இந்தப் படகு லிபியாவில் இருந்து கிரீஸ் நோக்கி வந்துள்ளது. இத்தாலியில் தயாரிக்கப்பட்ட இந்தப் படகு, லிபியாவின் டோப்ருக் பகுதியில் இருந்து புறப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இந்தப் படகில், எத்தனை பேர் பயணித்தனர் என்பது குறித்த தகவல் இன்னும் கிடைக்கவில்லை. மீட்புப் பணியில் கடலோர காவல் படையைச் சேர்ந்த 6 கப்பல்களும், ஒரு கடற்படை கப்பலும் ஈடுபட்டுள்ளன.

இந்தப் படகில் எகிப்து, சிரியா, பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதிகம் இருந்துள்ளனர்" என தெரிவித்தனர். (நி)

# ...நிலையத்திற்குள் தீ விபத்து



காயம் ஏற்பட்டுள்ளதாக தகவல் இல்லை, விமானநிலையத்திலிருந்து விமானங்கள் புறப்படுவதும் தரையிறங்குவதும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் தீயணைப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரிடம் காணிகள் உள்ளவரை அபிவிருத்தியில் முன்னேற முடியாது

## சிறீதரன் எம்.பி சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

**கிளிநொச்சி நகரத்தில் உள்ள நாற்பது வீதமான காணிகள் தொடர்ந்தும் படையினர் வசம் இருக்கின்ற போது நகரத்தின் அபிவிருத்தி பேசுவதில் எந்த முன்னேற்றமும் ஏற்படாது என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாகாவித்தியாலய விளையாட்டுமைதானக் காணிக்குரிய பாதை இதுவரை படையினரால் விடுவிக்கப்படாத நிலை காணப்படுகின்றது. இது தொடர்பில் கடந்த செவ்வாய்கிழமை பிற்பகல் நடைபெற்ற மார்வட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து குறிப்பிடுகையில் கிளிநொச்சி நகரத்தில் முக்கிய இடத்திலே இருக்கின்ற காணிகள், வர்த்தக நிலையங்கள் இன்றும் படையினரின் கட்டுப்பாட்டில் தொடர்ந்தும் இருந்து வருகின்றன.

இதனால் நகரத்தின் அபிவிருத்தியை அல்லது மாவட்டத்தின் அபிவிருத்தியை தீர்மானிக்க முடியாத ஒரு சூழல் காணப்படுகின்றது.

கிளிநொச்சி நகரத்துக்கான நூலகம் ஒன்று இதுவரை கட்ட முடியாத நிலையில் தற்போது நூலகத்திற்கு சொந்தமான காணியில் இரண்டு பரப்பு காணியை மாத்திரமே படையினர் விடுவித்திருக்கின்றார்கள். ஏனைய நான்கு பரப்பு காணி இதுவரை விடுவிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இதைவிட மக்கள் போக்குவரத்துக்களுக்கு இலகுவாக காணப்பட்ட குமார சூரியர் வீதி, யோகர் சுவாமி வீதி என்பன நீண்ட காலமாக பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்த வீதி என்பதுடன் இந்த வீதி நகர உருவாக்கத்திற்கு முன்னரான பழைய வீதிகளாகவே இந்த வீதிகள் காணப்படுகின்றன.

ஆனால் இந்த வீதிகள் இரண்டையும் இராணுவத்தினர் முழுமையாக மூடி இராணுவ முகாம் அமைத்துள்ளனர். கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கு சொந்தமான விளையாட்டு மைதானத்திற்கு மாணவர்கள் சென்று வருவதற்கு குமார சூரியர் வீதியை பயன்படுத்த வேண்டிய ஒரு தேவை காணப்படுகிறது. பாடசாலைக்கு முன்பாக உள்ள குமார சூரியர் வீதியை முழுமையாக படையினர் மூடி இருப்பதினால் இந்த மாணவர்கள் ஏ-09 வீதி வழியாக விளையாட்டு மைதானத்திற்கு செல்ல வேண்டிய ஒரு நிலை காணப்படுகிறது.

இவ்வாறான நிலை யில் குறித்த வீதியை விடுமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அந்த வீதிகளை விடுவதற்கு படையினர் தயாராக இல்லை.

இதே போல கிளிநொச்சி டிப்போ சந்திக்கு முன்பாக நினைவுச் சின்னமாக படையினர் பயன்படுத்துகின்ற சந்திரன் பூங்கா காணி மற்றும் அதற்குப் பின் உள்ள காணி என்பன இன்றுவரை படையினரால் விடுவிக்கப்படாத நிலையில் தொடர்ந்தும் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டே வருகின்றன என மேலும் தெரிவித்தார். (4-315)

# நெற்செய்கை மேற்கொள்ளப்படும் பகுதிகளில் மணல் அகழ்வு

## ஒருவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம் பொக்கணை பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வயல் நிலங்களில் காணி உரிமையாளரின் அனுமதி இன்றி சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபடுவதாக தருமபுர பொலிஸாருக்க நேற்று கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் உழவு இயந்திரமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-316)

## கிளி.தெற்கு கல்வி வலயத்தில்

# அதிபர், ஆசிரியர்கள் இன்றி இயங்கும் பல பாடசாலைகள்

## பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்திற்கு உட்பட்ட 66 பாடசாலைகளில் 9 பாட சாலைகளுக்கு அதிபர்கள் இல்லாத நிலையில் கடந்த ஆறுமாத காலமாக இயங்கி வருவதாக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்வி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, கரைச்சி, பூநகரி ஆகிய பிரதேசப் பாடசாலைகளை உள்ளடக்கிய வகையில் அமைந்துள்ள கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் உள்ள 66 பாடசாலைகளில் கூடுதலான பாடசாலைகள் அதிபர்கள் மற்றும் பாடரீதியான ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை போக்குவரத்து வசதிகள் இன்மை எனப்பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றன.

எனவே தரமுள்ள பிரதி அதிபர்களை நியமிக்குமாறு மாகாண கல்வித் திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதற்கான போக்குவரத்து வசதிகளும் நெருக்கடி நிலை காணப்படுகின்றன.

குறிப்பாக முக்கொம்பன் பூநகரி ஊடாக அக்கராயன் வரை இடம்பெற்ற போக்குவரத்து சேவைகள் சீரின்மையால் அந்த வீதி வழியாக இலகுவாக பயணிக்க கூடிய ஆசிரியர்கள் கிளிநொச்சி பேருந்து நிலையத்துக்கு வந்தே அவர்கள்தங்களுடைய பயணங்களை செய்ய வேண்டியுள்ளனர்.

இவ்வாறு பல்வேறு போக்குவரத்து நெருக்கடிகள் அதிபர்கள் இன்மை மற்றும் ஆசிரிய ஆளணி என பலவேறு பல நெருக்கடிகளை குறித்த பாடசாலைகள் எதிர் நோக்குவதாக தெரிவித்துள்ளார். (4-6-315)



யாழ்ப்பாணம் நீராவியடி சைவபரிபாலசபையில் நாவலர் சோலை முன்பள்ளியின் மாணவர்களுடைய 2023 ஆம் ஆண்டின் வருடாந்த கண்காட்சி சைவபரிபாலனசபை தலைவர் உ.தயானந்தன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. (படம்: கஜிந்தன்)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு விழாவை அடையாளப்படுத்தும் முகமாக நூற்றாண்டு நினைவிடம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. இதற்கான அத்திவாரம் இடும் நிகழ்வு கலாசாலையின் அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

# போதிய நீர் வருகை இன்மையால் நெற்பயிர் அழிவடையும் அபாயம்

## இரணைமடு விவசாயிகள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோகச் செய்கைகளுக்கு போதியளவு தண்ணீர் கிடைக்காத நிலையில் நெற்பயிர்கள் நீரின்றி கருகி அழிவடையும் நிலையில் காணப்படுகின்றன என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

பன்னங்கண்டி, புலிங்கதேவன் முறிப்பு ஆகிய பகுதிகளில் சீரான நீர் விநியோகமின்மையால் சிறுபோக செய்கைகள் அழிவடையும் நிலை காணப்படுவதால்பெருமளவான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.



சட்ட ரீதியற்ற செய்கைகளுக்குத் திருட்டுத்தனமாக தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு தண்ணீர் வீண் விரயம் செய்யப்படுகின்றன எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சட்டரீதியான சிறுபோக செய்கைகளுக்குரிய தண்ணீரை சீரான முறையில் பகிர்ந்து விநியோகிக்க வேண்டிய வாய்க்கால் பிரதிநிதிகள் மற்றும் கமகார அமைப்புகள் விவசாயிகளின் பொறுப்பற்ற தன்மை மற்றும் சிறுபோக பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வயர் காணிகள் சீர் செய்யப்படாத நிலை என்பவற்றால் அதிகளவு நீர் வீண் விரயமாக்கப்பட்டு சட்டவிரோத செய்கைகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றமை நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளின் கள ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டு அதற்கான தண்டம் அறவிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (4-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிச்சலுகைகளை மக்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை முன்னெடுப்பு

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை மக்களுக்கு வரிச் சலுகைகளை வழங்க தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையின் பொருளாதாரம் தற்போது மேம்பட்டுள்ள நிலையில், அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியும் வலுவடைந்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், வியாபாரிகளுக்கு சலுகைகள் வழங்கப்படுவதை போன்று சாதாரண மக்களுக்கும் வரிச் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில், சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் நாட்களில் மக்களுக்கான வரிச் சலுகைகள் வழங்கப்படுமெனவும் அத்துடன், மக்களுக்கு அதிகளவான நிவாரணங்களை வழங்க அரசாங்கம் எதிர்வரும் காலங்களில் பல நடவடிக்கைகளை முன்னெடுக்குமெனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (நி)

# வீட்டுத்தோட்ட பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

வீட்டுத்தோட்ட செய்கையின் ஊடாக மனைப்பொருளாதார நெருக்கீட்டினை குறைப்பதுடன் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு இட்டுச்செல்லும் நோக்கிலும் வீட்டுத்தோட்ட செய்கையினை ஊக்குவிக்கும் பயிற்சி பட்டறையானது கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தினால் எதிர்வரும் 21 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை நடத்தப்படவுள்ளது.

“இப் பயிற்சி நெறியில் வீட்டுத்தோட்ட செய்கைக்கான பயிர்த் தெரிவு, அவற்றின் பராமரிப்பு முறைகள், இதற்கான இயற்கைப்பசளை உற்பத்தி மற்றும் இயற்கையான பீடைக்கட்டுப்பாடு முறைகள் போன்ற பல்வேறு விடயங்களில் அறிவூட்டல் செயன்முறை இடம்பெறும்.

எனவே இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவர்கள் இவற்றுக்கான பதிவுகளை 19 ஆம் திகதிக்கு முன் 021 226 4958 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் இப்பயிற்சி நெறியில் பங்குபற்றி பயன் பெறுமாறும் பிரதேச செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (4-6)

# விவசாயிகளுக்கு தோட்டாவுடன் துப்பாக்கி விவசாய அமைச்சர் அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

விவசாயிகளுக்கு துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

பயிர்களை நாசம் செய்கின்ற குரங்கு உள்ளிட்ட விலங்குகளை கலைப்பதற்காகவே இவ்வாறு துப்பாக்கிகள் வழங்கப்படுகின்றன.

தேசிய விவசாய ஆணைக் குழுவுடன் நேற்று பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது விவசாய பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கைக்கு அமைய அமைச்சர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பயிர்களை பாதுகாப்பதற்காக விவசாயிகளுக்கு வெடிமருந்து துப்பாக்கிகள் வழங்குவது தொடர்பில் விவசாய அபிவிருத்தி ஆணையாளர்



நாயகம் பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம் ஒன்றை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# 88 தடவைகள் இரத்ததானம் வழங்கியவர்கள் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

உலக குருதிக்கொடையாளர் தினத்தை முன்னிட்டு நேற்று கொழும்பு தேசிய இரத்த மத்திய நிலையத்தில் நடைபெற்ற கௌரவிப்பு விழாவில் இது வரை 88 தடவைகள் இரத்த தானம் செய்து சாதனை படைத்த நயினாதீவைச் சேர்ந்த துரை மணி ரமணன் தேசிய ரீதியாக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். (4-6-33)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2854

**டிலான்**




**தீக்ஷா**

வர வர லைப்ல சந்தோஷமே வர மாட்டேங்குதே...




செட்டிங்ஸ்ல வயரு... கியரு ஏதும் விட்டு போச்சோ

**திவி**

நம்ம வளர்ச்சியை பார்த்து நாமே வருத்தப்படுவது...



தொப்பை விழும்போது மட்டும்தான்...

**யதுசன்**

ரொம்ப வெள்ளையாவும் இல்லாம, ரொம்ப கறுப்பாவும் இல்லாம மா நிறத்தில ரொம்ப அடக்கமான அழகான ஒரு பெண்ணை வாழ்க்கைத் துணையாக கொடுங்க கடவுளே...



தம்பிக்கு ஒரு சொர்ணாக்கா பார்சல்...

**டினு**

காதல் என்பது சாணிய மிதிச்ச மாதிரி கழுவினா போயிடும்...



கல்யாணம் என்பது ஆணிய மிதிச்ச மாதிரி கழுவினாலும் தழும்பு போகவே போகாது...

**பிறைநிலா**

தொடப்பக்கட்டைக்கு கணக்கு தெரியுமாடா???



அப்புறம் எப்படிடா அது கூட்டுது... பெருக்குது...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 205



காடும் மலையும் நிறைந்த அந்நாட்டில் தமிழகத்தின் மானத்தையும் வீரப் பண்பையும் நிலைநாட்டுவதற்காக அவர்கள் போர் புரிந்து வருகிறார்கள்.

கொடும் பாளூர் இளங்கோ அந்த ஈழ நாட்டுக்குப் படையெடுத்துச் சென்று போர்க்களத்தின் முன்னிலையில் நின்று, மார்பில் வேலைத் தாங்கி உயிரை விடவில்லையா? எஞ்சியிருந்த சோழ வீரர்கள் அத்தனை பேரும் இறுதிவரை போரிட்டு மடியவில்லையா? அப்படி இறந்தவர்களின் ஆவிகள் அமைதியுறும் பொருட்டு மீண்டும் புலிக் கொடியின் வெறறியை அந்த ஈழத்தீவில் நிலைநாட்டுவதற்காகவே இளவரசர் அருள் மொழித் தேவர் சென்றிருக்கிறார். அவருடைய தலைமையில் போரிடும் நம் வீரர்களுக்கு இந்தப் பழுவேட்டரையர்கள் உணவும் துணியும் பணமும் ஆயுதமும் அனுப்ப மறுக்கிறார்களாமே? இது என்ன அநியாயம்? இப்படியும் உண்டா? தஞ்சாவூர்க் கோட்டையில் உள்ள தானியக் களஞ்சியங்களில் ஏராளமாக நெல்லை நிரப்பி வைத்திருக்கிறார்களே? அவ்வளவும் என்னத்திற்கு? நூறு ஆண்டு காலமாக அரண்மனைப் பொக்கிஷங்களில் சேர்ந்திருக்கும் பணந்தான் எதற்கு?

இந்தச் சமயத்தில் நம்முடைய வீரர்களுக்குப் பயன் படாத தனமும் தானியமும் என்னத்திற்கு? நூறு ஆண்டு காலமாக அரண்மனைப் பொக்கிஷங்களில்சேந்திருக்கும் பணம் தான் எதற்கு? இந்தச் சமயத்தில் நம்முடய வீரர்களுக்குப் பயண்படாத எல்லாவற்றையும் இந்தப் பழுவேட்டரையர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? சாகும்போது யமலோகத் திற்குத் தங்களுடன் கொண்டு போகப் போகிறார்களா?

இப்படியெல்லாம் சில காலமாகவே சோழ நாட்டு மக்கள் முணுமுணுத்துக் கொண்டிருந்தது திருமலை நம்பிக்குத் தெரிந்திருந்த விஷயந்தான். அதிலும் பழையாறை மக்களுக்கு இது விஷயமாகக் கோபம் அதிகமாக இருப்பதும் இயற்கையே. ஈழநாட்டுப் போர்க்களத்துக்குச் சென்றிருக்கும் பதினாயிரம் வீரர்களின் பெண்டு பிள்ளைகளும் உற்றார் உறவினரும் இந்த மாநகரில் இன்னும் வசித்து வருகிறார்கள் அல்லவா?

ஆகவே, பழுவேட்டரையர்களின் கட்டளையின் பேரில், குற்றம் செய்து விட்ட ஒற்றனைப் பற்றிப் பறை முழங்கி அறைகூவியதைப் பழையாறை மக்கள் விரும்பவில்லை. பழுவேட்டரையர்கள் மீது தங்களுக்குள்ள குறைகளைப் பற்றிப் பேசிக் கொள்வதற்கு அது ஒரு காரணமாயிற்று.

ஒற்றனாம் ஒற்றன்! எந்த நாட்டிலிருந்து ஒற்றன் இங்கே வந்து விடப் போகிறான்! குமரி முனையிலிருந்து வட பெண்ணை வரையில்தான் புலிக்கொடி பறந்து வருகிறதே! ஒற்றனை அனுப்பும்படியாக வேற்றரசன் யார் அவ்வளவு பலசாலியாக இருக்கிறான்? இந்தப் பழுவேட்டரையர்களுக்குப் பிடிக்காதவன் யாராவது இருந்தால் அவன் பேரில் ஒற்றன் என்று குற்றம்சாட்டி வேலை தீர்த்து விடுவார்கள்! அல்லது பாதாளச் சிறையில் தள்ளி விடுவார்கள்!. இருந்தாலும் நமக்கென்னத்துக்கு வம்பு? அதிகாரம் அவர்களுடைய கையில் இருக்கிறது! நியாயம் அநியாயம் எது வேணுமானாலும் செய் வார்கள்! ஒற்றன் என்ற பட்டத்தைச் சூட்டி விட்டால், ஊர்ப் பஞ்சாயத்துக்களைக் கூடக் கேட்க வேண்டியதில்லை அல்லவா..? இப்படியெல்லாம் பழை யாறை மக்கள் மனத்தில் நினைத்ததையும் வாயினால் முணுமுணுத்ததையும் ஒருவருக்கொருவர் மெல்லிய குரலில் பேசிக் கொண்டதையும் ஆழ்வார்க்கடியான் செவிப் புலன் வழியாகவும் மதி ஊகத்தினாலும் தெரிந்து கொண்டான்.

(தொடரும்)



## சிறுவர் அரங்கம்

# பண மூட்டை



முன்னொரு காலத்தில் பணக்கார பிரபு ஒருவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். மூத்தவன் அமுதன் மிகவும் நல்லவன் இரக்க குணமுடையவன். இளையவன் யாசகன் மிகவும் கெட்டவன்.

கொஞ்ச நாட்களில் பணக்காரர் இறக்கவே அண்ணனும், தம்பியும் வியாபாரத்தை கவனித்து வந்தனர். அவர்கள் இருவரும் ஒரு முறை ஒரு கிராமத்திற்குப் போய் தமக்கு வரவேண்டிய ஆயிரம் பவுன்களை வசூலித்தனர்.

அதனை ஒரு பையில் போட்டுக் கொண்டு இருவரும் ஊர் திரும்ப ஆற்றங்கரைக்கு வந்து சேர்ந்தனர். படகுக்காரன் எங்கோ போயிருந்ததால் தம்பியிடம் பண மூட்டையைக் கொடுத்து விட்டுச் சற்று கண் மூடித் தூங்கினான் அண்ணன். இதற்குள் தம்பி அதே போல ஒரு பண மூட்டையில் கற்களை வைத்துக் கட்டி எடுத்து ஒளித்துக்கொண்டான்.

சற்று நேரத்திற் கெல்லாம் படகுக்காரன் வரவே தம்பி தன் அண்ணனை எழுப்பி அவரோடு படகில் ஏறி உட்கார்ந்தான். படகும் கிளம்பியது. படகு நடு ஆற்றில் போகும் போது தம்பி ஒரு மூட்டையை எடுத்து ஆற்றில் நழுவ விட்டு, "ஐயோ அண்ணா பணமூட்டை ஆற்றில் விழுந்து விட்டதே" எனக் கூறினான்.

"போனால் போகட்டும். அது நம் பணமாக இருந்தால் நமக்கே கிடைக்கும்," எனக் கூறினான் அமுதன். தம்பியும் தான் தந்திரமாக ஆயிரம் பவுன்களை தட்டி விட்டதாக எண்ணி மகிழ்ந்தான். ஆனால், அவன் அவசரத்தில் ஆற்றில் போட்டது பண மூட்டையைதான்.

கற்களை வைத்துக் கட்டிய மூட்டைதான் அவனிடம் இருந்தது. அந்த ஆற்றில் ஒரு பூதம் இருந்தது. தம்பி மூட்டையை ஆற்றில் போட்டதும் ஒரு மீனை உடனே விழுங்கச் சொல்லி கட்டளை இட்டது அது. மீனும் அப்பூதம் சொன்னபடி நடந்தது. பூதம் தம்பி செய்த மோசடியை புரிந்து கொண்டது. எனவே, அந்தப் பண மூட்டையை எப்படியும் அண்ணனிடம் சேர்த்து விட எண்ணி மூட்டையை விழுங்கிய மீன் எங்கும் போகாதபடி காவல் காத்தது.

அண்ணனும், தம்பியும் காசிக்கு வந்து தம்வீட்டை அடைந்தனர். தம்பி வீட்டில் தனியாக ஒரிடத்திற்குப் போய் தன்னிடமிருந்து மூட்டையை அவிழ்த்துப் பார்த்தான். அதில் கற்கள் இருப்பதைக் கண்டு, "ஐயோ! நான் அண்ணனை ஏமாற்ற எண்ணி நானே ஏமாந்தேனே.." என எண்ணி மனம் புழுங்கினான்.

அன்று சில மீனவர்கள் ஆற்றில் வலை போட்ட போது பூதம் மீனவராக மாறி அந்த மீனை எடுத்துக் கொண்டு அண்ணனின் வீட்வீடுக்குச் சென்றது.

அண்ணன் அவன் கேட்டபடி ஒரு பவுனைக் கொடுத்து அந்த மீனை வாங்கிக் கொண்டார். அதனை அவர் தன் மனைவியிடம் கொடுக்கவே அவள் அதனை இரண்டாக நறுக்கினாள். அதன் வயிற்றிலிருந்து பண மூட்டை வெளியே விழுந்தது.

அதைக் கண்டு திகைத்தான் அமுதன். "இது நம் பணமே. இத்னை நம்மிடம் கொடுக்கவே இந்த மீனவன் வந்திருக்கிறான். இவனுக்கு எப்படி இது தெரிந்தது?" என எண்ணி ஆச்சரியப்பட்டான்.

அப்போது, "அமுதா... நீ மிகவும் நல்லவன். இந்த ஊரில் உள்ள ஏழைகளுக்கு நிறைய உதவிகளைச் செய்கிறாய். ஒரு முறை நீங்கள் படகில் சென்றபோது உன் கையில் இருந்து நழுவிய உணவு பொட்டலத்தை உண்டேன்.

"அது எனக்கு மிகுந்த பலத்தைக் கொடுத்தது. அதனால் தான் உன்னுடைய பணமூட்டையை உன் தம்பி வேண்டுமென்றே தூக்கி வீசிய போது அதை விழுங்கும்படி இந்த மீனுக்கு கட்டளை கொடுத்தேன். அந்த மீனையும் எடுத்துக் கொண்டு வந்தேன். நல்லவர்களுக்கு எல்லாமே நல்லதாய் தான் நடக்கும்..."என்று சொல்லி மறைந்தது.

அதை கேட்டு மகிழ்ந்தான் அமுதன். மறைக்காமல் அதில் பாதி யான ஐநூறு பவுன்களைக் தன் தம்பியிடம் கொடுத்தார். தம்பியும் தனது அண்ணனுடைய் கால்களில் விழுந்து மன்னிப்புக் கோரினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் கூட்டுவது எளிதான காரியம் ஆனால் ஒருமித்து செயற்படுவதே கடினம்.
– தாகூர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள தொல்லியல் சின்னங்களை

## அரசாங்கத்திடமிருந்து காப்பாற்றுங்கள்–உதய கம்மன்பில

முல்லைத்தீவு குருந்-தூர் மலை உட்பட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் சின்னங்களை பிரிவினைவாதிகளிடமிருந்தோ அல்லது தீவிரவாதிகளிடமிருந்தோ அல்ல தற்போதைய அரசாங்கத்திடம் இருந்துதான் காப்பாற்ற வேண்டியுள்ளது என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிவித்துரு ஹெல உறுமய கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உதய கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுப் பாரம்பரியங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருப்பதாகத் தெரிவித்த கம்மன்பில அமைச்சர் சிறில் மத்யூ யுனெஸ்கோ அமைப்பிற்கு அனுப்பியுள்ள முறையீட்டில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த 276 இடங்கள் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இவை 1983 ஆம் ஆண்டளவில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

எனவே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புராதனச் சின்னங்கள் அழிக்கப்பட்டமை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்ற பிரேரணையை எதிர்வரும் 19ஆம் திகதி சபாநாயகரிடம் கையளிப்பதாக எதிர்பார்ப்பதாக உதய கம்மன் பில தெரிவித்தார். (ம-7)

## சுமந்திரன் எம்.பியின் கோரிக்கையை தமிழ்த் தரப்புகள் வலுப்படுத்த வேண்டும்

புத்தசாசன மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும்.

இக்கோரிக்கையை நாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுக்கின்றோம் எனப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் (14) தெரிவித்துள்ளார்.

தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் மனத்துங்க தனது பதவியை இராஜினாமாச் செய்தமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் செய்தியாளர்கள் வினவியபோதே, விதுர விக்கிரமநாயக்கவை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்ற கருத்தை அவர் முன் வைத்துள்ளார்.

இந்தக் கருத்தை முன்வைத்த பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், தனது கோரிக்கையை நியாயப்படுத்தும் வகையில், வடக்குக் கிழக்கில் தமிழர்களின் நிலங்களை அபகரிப்பதில் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவே முக்கிய பங்கு வகிக்கின்றார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு நேரில் சென்று இவ்வாறான நில அபகரிப்பு வேலைகளை அவர் திட்டமிடுகின்றார்.

குருந்தூர்மலையில் விக்கிரகம் உடைக்கப்பட்டபோது அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அங்கேயே இருந்துள்ளார்.

முன்னதாக அந்த இடத்துக்கு இராணுவம் சகிதம் அவர் சென்றிருக்கிறார் என்ற ஆதாரங்களையும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முன்வைத்துள்ளார்.

ஆக, தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் மனத்துங்க தனது பதவியை இராஜினாமாச் செய்ததன் மூலம் தொல்லியல் திணைக்களம் தமிழ் மக்களுக்கு அநீதி செய்தமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொல்லியல் திணைக்களத்தை பிழையாக வழிப்படுத்துகின்ற பிரதான சூத்திரதாரியாக இருக்கக்கூடியவர் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க.

எனவே அவரை குறித்த அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும். மாறாக அவரைத் தொடர்ந்தும் அமைச்சராக வைத்திருந்தால், பிரதான குற்றவாளி தப்பித்துக் கொள்ள, பிரதான குற்றவாளியின் ஏவலை நிறைவேற்றிய இரண்டாம் தரக் குற்றவாளி பதவி விலகியதாக முடிந்துவிடும்.

அதாவது பிரதான குற்றவாளியைப் பதவி நீக்கம் செய்யாமல் விட்டால், தொல்லியல் திணைக்களத்தில் இருந்து வேறு யார் பதவி விலகினாலும் தொல்லியல் திணைக்களத்தால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநியாயம் நிற்கப் போவதில்லை.

எனவே அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் முன்வைத்த கோரிக்கையை அனைத்துத் தமிழ் அரசியல் தரப்புகளும் தமிழ் சிவில் அமைப்புகளும் வலுப்படுத்த வேண்டும்.

இதற்கான கோசங்களும் கோரிக்கைகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சென்றடைவது கட்டாயமானது.

இவ்வாறு செய்வதன் மூலமே பேரினவாதப் பிரகிருதிகளின் பற்களைப் பிடுங்கி அவர்கள் கக்குகின்ற இனவாத நஞ்சை விசமற்றதாக ஆக்க முடியும்.

ஆகையால் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவை. அமைச்சுப் பதவியில் இருந்து நீக்குக என்ற கோரிக்கையை ஒற்றுமையாக ஒரே குரலில் முன்வைப்போம்.

# பாடசாலை மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பில்

## அதிபர்களுடன் கல்வி அமைச்சு கலந்துரையாடல்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து அதிபர்களுடன் கலந்துரையாடி வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

கிடைக்கப்பெற்றுள்ள பல்வேறு முறைப்பாடுகளுக்கு அமைய இந்த கலந்துரையாடல் நடத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் மாகாண அதிகாரிகளுடன் வாரத்திற்கு ஒருமுறை தொலைக்காணொளி தொழிநுட்பத்தின் ஊடாக பல தெளிவூட்டல்களை வழங்க எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்தார். மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் எதிர்காலம் தொடர்பில் பெற்றோருக்கும் முக்கிய பொறுப்பு உள்ளதாகவும் கல்விஅமைச்சர் சுசில் பிரேம ஜயந்த குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# மது தன்சல் காணொளியை பதிவேற்றியோர் கைது

பொசன்பூரணைத்தினத்தன்று மதுபான தன்சல் வழங்கியதாக கருதப்படும் காட்சியை சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்ததாகக்கூறப்படும்ஆறு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபானத்தைவிளம்பரப்படுத்திய குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்களை பொலிஸ் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். இந்த காணொளிசமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருவதால் பொலிஸ்மா அதிபர் இது தொடர்பான விசாரணைகளை கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்தார்.

இதனையடுத்து கட்டுநாயக்க பிரதேசத்தைச் சேர்ந்த 20 முதல் 25 வயதுக்குட்பட்ட 6 பேர் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு அவர்களிடம் இருந்து காணொளி தொடர்பாக நீண்ட நேர வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இதன் போது தங்களது உறவினர் ஒருவரால் கொண்டு வரப்பட்ட வெற்று வெளிநாட்டு மதுபான போத்தலில் தேநீரை ஊற்றி ரிக்டோக்கில் காணொளி தயாரிப்பதற்காக தாம் இந்த செயலை செய்ததாக குறித்த இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் குறித்த ஆறுபேரையும்கைதுசெய்த புல்னாய்வுப் பிரிவு அதிகாரிகள் கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்தனர். (ம-7)

# குற்றவாளியை அகதியாக ஏற்க நியூசிலாந்து மறுப்பு தெரிவிப்பு

இலங்கையைச்சேர்ந்த 33 வயதான புகலிடக் கோரிக்கையாளரின் ஏதிலி அந்தஸ்து கோரிக்கையை நியூசிலாந்து நாட்டின் தீர்ப்பாயம் ஒன்று நிராகரித்துள்ளது.

அவர் ஏதிலி அல்லது பாதுகாக்கப்பட்ட ஆள் என்ற அந்தஸ்தை வழங்க நியூசிலாந்து குடிவரவு மற்றும் பாதுகாப்பு தீர்ப்பாயம் மறுத்துள்ளது.

நியூசிலாந்தில் பாலியல் வன்புணர்வு மற்றும் சட்ட விரோத நாணய பரிமாற்றம் போன்றவற்றுக்காக தண்டிக்கப்பட்ட அவர் சிறையில் இருந்தபோது கிறிஸ்தவ மதத்திற்கு மாறியதாகவும் தாய்நாட்டிற்கு திரும்பினால் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றும் வாதிட்டார்.

எனினும் இலங்கையில் அவர் துன்புறுத்தப்படுவதற்கான வாய்ப்புக்களை தீர்ப்பாயம் நிராகரித்துள்ளது.

இலங்கையில் அவர் 2013 ஆம்ஆண்டில்கைது செய்யப்பட்டுடன் அவருக்கு எதிராக கொலை முயற்சி குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது.

ஆனால் அவரது குடும்பத்தினர் உள்ளூர் அதிகாரிகளுக்கு பணம் செலுத்திய பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். இதன் பின்னர் 2014 இல் கல்விக்காக நியூசிலாந்திற்கு இடம் பெயர்ந்ததுடன் பல்வேறு மாணவர் விசாக்களில் அங்கு தங்கியிருந்தார். இதன்போதே அவர்போதைப் பொருள் பாவனை மற்றும் ஏனைய குற்றங்களில் ஈடுபட்டார் என்று தீர்ப்பாயம் கண்டறிந்துள்ளது. (ம-7)

# 50,000 தென்னங்கன்றுகளை கோரியது மாலைதீவு

(கொழும்பு)

இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவனத்திடம் இருந்து மாலைதீவில் நடவு செய்வதற்காக 50,000 கலப்பின தென்னை நாற்றுகளை பெற மாலைத்தீவு திட்டமிட்டுள்ளது.

அந்நாட்டுவிவசாய அமைச்சர் கலாநிதி ஹசைன் ரஷீத் ஹசன் பெருந்தோட்டகைத்தொழில் அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரனவை நேற்று முன்தினம் சந்தித்த போது இது தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளதுடன் இந்தக் கோரிக்கையை விரைவில் நிறைவேற்றித் தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் மல்ராஜ் பீரிஸ் தெரிவிக்கையில் தென்னை மரக்கன்றுகளுக்கான வருடாந்த தேவைக்கு ஏற்ப தமது நிறுவனம் வருடா வருடம் தென்னை மரக்கன்றுகளை உற்பத்தி செய்வதால் 50,000 தென்னை மரக்கன்றுகளை மாலைதீவுக்கு வழங்க முடியாது என தெரிவித்தார்.

மேலும்தற்போது மாலைதீவுக்கு சுமார் 10,000 தென்னை மரக்கன்றுகளை வழங்குவதற்கு தமது நிறுவனங்களுக்குத் திறன் இருப்பதாகவும் அந்த அளவு தென்னை மரக்கன்றுகளை மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்ய 17 கொள்கலன்கள் தேவைப்படும் என்றும் அவர் கூறினார்.

ஒரு கலப்பின தென்னைச் செடியை உற்பத்தி செய்வதற்கு குறைந்தது பத்து மாதங்களாவது தேவைப்படுவதால் அந்தக் காலப் பகுதிக்குள் மாலைதீவு கோரும் முழு அளவிலான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்யும்திறன் தனது நிறுவனத்திற்கு இருப்ப தாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை யாழ்.பிரதேசத்தில்** அரசடி, மருதடி, ஆசிரியர் வீதி சந்தி, டச்சு வீதி [illegible] சந்தி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** இராணுவ ஆதார வைத்தியசாலை, Corona வைத்தியசாலை, பாரதிபுரம், கிருஷ்ணபுரம், விநாயகபுரம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம், சமயபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்று முதல் குறைந்தது யூரியா விலை- மகிந்த அமரவீர

(கொழும்பு)

இலங்கையில் யூரியா உர மூட்டையின் விலை 10 ஆயிரம் ரூபாவாக விற்கப்பட்டு வந்த நிலையில் நேற்று முதல் 9 ஆயிரம் ரூபாவிற்கு விற்க ப்படுவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித் தார்.

கடந்த காலங்களில் ரூபா வின் மதிப்பு வலுப் பெற்றிரு ந்ததுடன் செலவுகளை குறை க்கப்பட்டிருந்தாகவும் அதன் பலனாகவே இந்த அனுகூல த்தை விவசாயிகள் பெற முடிந்தததாக அமைச்சர் குறி ப்பிட்டுள்ளார்.

மேலும் சில அதிகாரிகளின் அலட்சியத்தால் விவசாயி களுக்கு உரிய நேரத் தில் உரம் கிடைக்க வில்லை என்றும்,

இது தொடர்பாக ஏற்க னவே அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வும் அமைச்சர் குறிப்பிட்டு ள்ளார். பணி செய்யாத அதி காரிகள் மீது நடவடிக்கை எடு க்க தயங்கப்போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# ராஜபக்ஷக்கள் நாட்டுக்கு இழைத்த அநீதிகளை மக்கள் மறக்க மாட்டார்கள்- எரான்

(கொழும்பு)

இந்நாட்டு மக்கள் ஒரு போதும் ராஜபக்ஷக்கள் நாட்டு க்கு இழைத்த அநீதிகளை மறந்து விடமாட்டார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாரா ளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ண குறிப்பிட்டு ள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலு வலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கை யில், "மீண்டும் ஆட்சிக்கு வரு வோம் என்று மொட்டுக் கட்சியின் சிலர் கூறுகிறார்கள்.

இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் செய்த அநியாயங் களை மக்களிடமிருந்து மறக் கடித்துவிடலாம் என்று அவ ர்கள் நினைத்துக் கொண்டி ருக்கிறார்கள்.

ஆனால், இந்நாட்டு மக்கள் ஒருபோதும் அவர்கள் நாட்டுக்கு இழைத்த அநீதிகளை மறந்து விடமாட்டார்கள். ராஜபக்ஷக்கள் கொள்ளையடித்ததை நிரூ பித்துக் காட்டுமாறு ஒரு அமை ச்சர் கூறுகிறார்.

திருடியது ஒரு பக்கம் இருக்கட்டும். பிழையான தீர்மானங்களை எடுத்து நாட்டு மக்களை இந்த நிலைமைக் குள் தள்ளியது யார் என்று கேட்க விரும்புகிறேன்.

இன்று 27 வீதமான பெற் றோர் தங்களின் உணவுத் தேவையை குறைத்து, தங்களின் பிள்ளைகளுக்கு உணவு வழங்கி வருவதாக



ஆய்வொன்றில் தெரியவந்து ள்ளது.

இதற்கெல்லாம் யார் கார ணம்? இப்படியான நபர்களுக்கு எதிராக சட்டம் நிலைநாட்டப்பட வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# மிகப்பெரிய வீழ்ச்சியை சந்தித்த இலங்கை ரூபா மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ அறிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்பில் மத்திய வங்கி தகவல் வெளியிட்டு ள்ளது.

இதன்படி, நேற்று முன் தினத்துடன் ஒப்பிடும்போது டொலருக்கு நிகரான ரூபா வின் பெறுமதி நேற்றும் கடுமை யான வீழ்ச்சியை சந்தித்து ள்ளது.

இதற்கு முந்தைய கால ங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாவின் பெறு மதி கடந்த ஒரு மாதத் திற்கும் மேலாக அதிவேக வளர் ச்சியை பதிவு செய்து வந் தது.

எனினும், கடந்த வாரத் தில் இருந்து ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து டொலரின் பெறுமதி உயர் வடைந்து வருகின்றது.

அத்துடன் கடந்த மூன்று நாட்களாக ரூபாவின் பெறுமதி பாரிய வீழ்ச்சியை சந்தித்து வருகின்ற நிலையில் ஏனைய வெளிநாட்டு நாண யங்களுக்கு எதிராகவும் ரூபா வின் பெறுமதி கடும் வீழ்ச்சி கண்டுள்ளது.

இந்தநிலையில், இல ங்கை மத்திய வங்கி நேற்று வெளி யிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொல ரின் விற்பனை விலை 328.92 ரூபாவாகவும், கொள் வனவு விலை 311.60 ரூபா வாகவும் பதிவாகியுள் ளது. (நி)

# சர்வதேச விண்வெளி நிலையத்தில் மலர்ந்த பூக்கள் நாசா விஞ்ஞானிகள் அசத்தல்

பூமிக்கு அப்பால் சர்வதேச விண் வெளி நிலையத்தில் ஆரஞ்சு வண்ணத்தில் ஜின் னியா பூவினை மலர வைத்து நாசா விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.

இதற்கான பரிசோதனை 2015 ஆம் ஆண்டு நாசா விண்வெளி வீரர் ஜெல் லிண்ட் கிரேனால் தொடங்கப்பட்டு ள்ளது.

மைக்ரோகிராவிட்டி எனப் படும் நுண் ஈர்ப்பு விசையில் தாவரங்களும், மலர்களும் எவ்வாறு வளர்கின்றன என் பதை விஞ்ஞானிகள் புரிந்து கொள்வதற்காக இந்த மலர்ச் செடியை சர்வதேச விண்வெளி



நிலையத்தில் வளர்த்து ள்ளனர்.

இந்த மலரை மலரச் செய்த தன் ஊடாக விண்வெளியில் அதிக தாவரங்களை வளர்க்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

விண்வெளி நிலையத்தில் வளர்ந்துள்ள ஜின்னியா பூவின் படத்தை நாசா தனது டுவிட்டரில் பகிர்ந்துள்ளதுடன் அது குறித்து நாசா அறி க்கையும் வெளியிட்டு ள்ளது. (நி)

## தீர்வுகளை பெற்றுத் தருமாறு வலியுறுத்தி

# அகில இலங்கை சுகாதார சேவை சங்கத்தினர் கொழும்பில் போராட்டம்



(கொழும்பு)

அகில இலங்கை சுகாதார சேவை சங்கத்தினர் நேற்று வியாழக்கிழமை கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு முன்பாக போராட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

கடந்த 2018 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி வரை யில் பல்வேறு பிரச்சினை களுக்கு முகங் கொடுத்து வருவ தாகவும், தமக்கான முறை யான தீர்வுகளைப் பெற்று தருமாறு வலியுறுத்தியும் பல் வேறு கோரிக்கை முன்வைத்து இந்தப் போராட்டத்தை நடத்தி யுள்ளனர். (நி)

## நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பண்பாட்டு பேரணி

(யாழ்ப்பாணம்)

வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கனக ராயன்குளம் மகா வித்தி யாலய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு எழு ச்சிமிகு பண்பாட்டு பேரணி இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 8 மணிக்கு கனக ராயன்குளம் பொது விளை யாட்டு மைதானத்திலிருந்து ஆரம்பமாகி கனகராயன் குளம் மகா வித்தியாலய மைதானத்தில் நிறைவடை யவுள்ளது.

கனககராயன்குளம் மகா வித்தியாலய அதிபர் கோ.குலே ந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ் விற்கு முதன்மை விருந்தி னராக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் து.லெனின் அறிவழகனும், சிறப்பு விருந்தினர்களாக வித்தியாலய பழைய மாண வர் த.இராசரத்தினம், சு.வேலாயுதம் பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (4-90)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 360 | 400 | 500 |
| தக்காளி | 260 | 300 | 300 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 220 | 200 | 240 |
| கோவா | 300 | 250 | 300 | 320 |
| கரட் | 350 | 350 | 400 | 440 |
| பூசணி | 100 | 80 | 80 | 120 |
| புடோல் | 130 | 160 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 140 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 | 150 |
| பாகற்காய் | 450 | 450 | 500 | 800 |
| வெண்டக்காய் | 150 | 160 | 120 | 320 |
| கருணைக் கிழங்கு | 130 | 200 | 180 | 200 |
| பயற்றங்காய் | 400 | 350 | 350 | 300 |
| லீக்ஸ் | 320 | 380 | 380 | 400 |
| பீற்றூட் | 400 | 350 | 400 | 500 |
| கறிமிளகாய் | 380 | 400 | 480 | 500 |
| முருங்கைக்காய் | 1500 | 1000 | 1200 | 1500 |
| போஞ்சி | 550 | 450 | 480 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 160 | 180 |
| கீரை - 1 பிடி | 50 | 30 | 50 | 60 |
| தேசிக்காய் | 350 | 250 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 80 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 200 | 280 | 350 |
| வெங்காயப்பூ | 450 | 400 | -- | 700 |
| முள்ளங்கி | 120 | 200 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 | 60 |
| வல்லாரை | 40 | 35 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 200 | — | 200 |

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எம்.பி யிடம் வாக்குமூலம் பதிவு

(முறிகண்டி)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி அன்று கொழும்பில் வைத்து ஸ்கது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் கிளிநொச்சி நீதி மன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுதலை செய் யப்பட்டார்.

குறித்த வழக்கை விசார ணைக்கு எடுத்துக்கொண்ட நீதவான், பொலிஸ் அத்தியட் சகர் தலைமையில் விசாரணை முன்னெடுக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட ப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று கிளிநொச்சி இரணை மடு சந்தியில் அமைந்துள்ள பொலிஸ் அத்தியட்சகர் அலு வலகத்திற்கு அழைக்கப்பட்டு பாராளுமன்ற உறுப்பினரிடம் சுமார் 4 மணிநேரம் வாக்கு மூலம்பதிவுசெய்யப்பட்டது.(4-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுர்த்தி...

துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நலன்புரி கொடுப்பனவுகளை நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவதற்கான நடைமுறை அறிமுகப்படுத்தப்படும் எனவும் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டார்.

மேலும், பயனாளிகளை எப்போதும் ஏழைகளாக வைத்திருக்காமல், அவர்களுக்கு பயன் கிடைக்கும் வகையிலான திட்டத்தை தயாரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

புதிய நலன்புரி திட்டம் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் சாகல ரத்நாயக்க தெரிவித்தார். (ம-7)

## இலங்கை...

ஆம் திகதி ஆரம்பமாகி ஜூலை மாதம் 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தொடரில் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் என்ற 51/1 தீர்மானத்தின் பிரகாரம், நாட்டின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் விவகாரத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும், பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழல் மோசடிகள் என்பன மனித உரிமைகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பொருட்களின்...

மாவின் விலை 5 ரூபாயால் குறைக்கப்பட்டு, 195 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு கிலோ கிராம் சிவப்பு பருப்பின் விலை, 4 ரூபாயால் குறைக்கப்பட்டு, 295 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு கிலோ கிராம் கடலை பருப்பின் விலை 13 ரூபாயால் குறைக்கப்பட்டு, 275 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படுவதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது. (ம-7)

## 60 வகையான...

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, 60 வகையான மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலை 16% ஆல் குறைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 350 ஆசிரியர்...

அமைச்சின் செயலாளர் அ.உமா மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ம-7)

## தென்னிலங்கை...

தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் பதவி விலகல் மற்றும் ஜனாதிபதி குறிப்பிட்ட கருத்துக்கு தென்னிலங்கையில் கடும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி தொல்பொருள் மரபுரிமைகளை ஒரு ஆயுதமாக பயன்படுத்திக் கொள்கிறார். குருந்தூர் விகாரை விவகாரத்தை மகாநாயக்கர்களிடம் கொண்டு செல்வோம் என பௌத்த மத தேரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் குருந்தூர் விகாரையின் விகாராதிபதி கல்கமுவே சத்தபோதி தேரர் தெரிவிக்கையில்,

குருந்தூர் மலை விகாரை மற்றும் காணி ஆகிய விடயங்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதிக்கும், தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தற்போது பாரிய சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

இதன் பெறுபேறாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பதவி வகித்த அனுர மனதுங்க பதவி விலகியுள்ளார்.

குருந்தூர்மலைக்கு சொந்தமான காணி அதிகம் எனவும் அநுராதபுரம் மகா விகாரையை காட்டிலும் குருந்தூர் விகாரைக்கு நிலப்பரப்பு அதிகம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் திணைக்கள பணிப்பாளரை நோக்கி நேரடியாக குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மகா விகாரையின் நிலப்பரப்பு 100 ஏக்கர் கூட இல்லை. அவ்வாறு இருக்கையில் குருந்தூர் விகாரையின் காணி எவ்வாறு அதிகரிக்க கூடும் என ஜனாதிபதி கேள்வியெழுப்பியுள்ளார். மகா விகாரை புத்தசாசனத்தின் ஆரம்பத்தை அடிப்படையாக கொண்டுள்ளதால் அதனை மகா விகாரை என்று குறிப்பிடுகிறோம்.

மகா விகாரைக்கு 2000 ஏக்கர் நிலப்பரப்பு சொந்தமாக உள்ளது. அபயகிரி விகாரை, இசுறுமுனி விகாரை மற்றும் புனித விகாரைகளை உள்ளடக்கியுள்ளது.

மிகிந்தலை விகாரை 500 ஏக்கர் நிலப்பரப்பை கொண்டுள்ளது. இந்த காரணிகளை அடிப்படையாக கொண்டே மகா விகாரையின் நிலப்பரப்பு அதிகம் என்று குறிப்பிடப்படுகிறது. இதனை ஜனாதிபதி, தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

குருந்தூர்மலையில் தமிழர்களுக்கு சொந்தமான காணி காணப்படுமாயின் அவற்றை விடுவிக்குமாறு ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பல ஆண்டு காலமாக தமிழர்கள் விவசாயம் செய்த காணிகளை தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்தியுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தொடர்ந்து குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

முல்லைத்தீவு குருந்தூர் விகாரைக்கு சொந்தமான காணி அளவிடப்பட்டு அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. 78 ஏக்கர் நிலப்பரப்பு வர்த்தமானி ஊடாக குருந்தூர் விகாரைக்கு உறுதிப்படுத்தப்பட்டது.

குருந்தூர்மலையில் பௌத்த தொல்பொருள் சின்னங்கள் காணப்படுவதால் அதனை ஆய்வு செய்வதற்காகவே மேலதிகமாக 223 ஏக்கர் காணி தொல்பொருள் பாதுகாப்பு பகுதியாக வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டது.

தமிழர்களின் காணிகளை தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்தவில்லை. வன அழிப்பு ஊடாக குருந்தூர் மலைக்கு சொந்தமான காணிகள் அழிக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பிரிவினைவாதிகளின் கருத்துகளுக்கு செவி சாய்க்காமல் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதி விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம் என்றார்.

இது தொடர்பில் மக்கள் பேரவையின் ஓமல்பே சோபித தேரர் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் மரபுரிமைகளை சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் நோக்கங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் ஜனாதிபதி செயற்படக்கூடாது. குருந்தூர் விகாரை மற்றும் குருந்தூர் மலையில் உள்ள பௌத்த மரபுரிமைகளை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும் என்றார்.

இது தொடர்பில் தேசிய வளங்களை பாதுகாக்கும் அமைப்பின் செயலாளர் கஸ்ஸப்ப தேரர் கருத்துத் தெரிவிக்கையில்,

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுர மனதுங்க பதவி விலகியமை தவறானது. ஜனாதிபதியின் சட்டவிரோத கட்டளைக்கு எதிராக போராடியிருக்க வேண்டும்..

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை தொல்பொருள் திணைக்கள பணிப்பாளராகவும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராச மாணிக்கத்தை தொல்பொருள் மற்றும் மரபுரிமைகள் அமைச்சராகவும் நியமிக்க வேண்டும். இதன்பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த மரபுரிமைகள் பாதுகாக்கப்படும்.

குருந்தூர்மலைக்கு சொந்தமான காணிகளை அரசியல் நோக்கத்துக்காக பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்விடயம் தொடர்பில் வெகுவிரைவில் மகாநாயக்க தேரர்களை நாடுவோம் என்றார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 15/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1601
வெற்றி இலக்கங்கள்
கன்னி 9 5 5 2 5 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1176
R 10 27 31 78
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.15
சீட்டிழுப்பு இலக்கம் 3388
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
P 07 49 56 68
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 15/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1494
வெற்றி எழுத்து, சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
C 06 16 17 26 30

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.15
சீட்டிழுப்பு இலக்கம் 455
மீனம் 02 05 49 52 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/15
சீட்டிழுப்பு இலக்கம் 5146
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
O 1 5 2 3 3 1
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2120
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.06.15
தினம் வியாழக்கிழமை
Y 32 33 54 56
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,417,640/-
DLB

சனிதா Shanida
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.15
வெற்றி வாரம்: 4281
வர்ணம்: சிவப்பு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,487,395.70
வெற்றி இலக்கங்கள் 09 10 26 70
ஆங்கில எழுத்து Z
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,171,882.60
திகதி 2023-06-15
வெற்றி வாரம் 3832
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 08 18 23 29
சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,761,120/-
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 32 01 19 32 40
சுப்பர் இலக்கம்
1296
2023.06.15 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 338,048,717.00
DLB
தொலைபேசி 011-2 333 546-47

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 602
திகதி 2023-06-15
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 10 31 57
விதி எண் 01
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 20,742,512.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அட கோட்டிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 1946
வர்ணம்: இளம் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2023.06.15
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 52,325,174.80
வெற்றி இலக்கங்கள் 23 43 55 56
ஆங்கில எழுத்து E
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் நகரில் வர்த்தகப் பிரிவு வகுப்புக்கள்

**புதிய பிரிவு ஆரம்பம் : 17.06.2023**

பிரிவு I – வாரநாட்கள்(பி.ப)

பிரிவு II – சனி, ஞாயிறு

**இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி பிரிவு**
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)

**G.C.E A/L 2024, 2025**

- வணிகக்கல்வி
- கணக்கீடு
- பொருளியல்
- தொடர்பாடல் தொழில்நுட்பம்

T.P: 021 222 3382, 077 440 5917

(மாணவர்கள் குழுக்களாகவும் கற்கலாம்.)

மதிப்பீட்டு பணியில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.

(C-6746)



## புதிய பிரிவுகள் ஆரம்பம் 24/06/2023

**Certificate Course in English**
20 Batches have Successfully Completed the course (4 Months)

Further Details: Jaffna College
Undergraduate dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149
077 440 5917

(C-6747)


# ரணில் - சஜித் இணைவதற்கு சாத்தியமில்லை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஒன்றிணையப் போவதாக, அரசாங்கத்திற்கு சார்பான சில ஊடகங்கள் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மொனரா கலை செயற்பாட்டாளர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பெரும் செல்வந்தர்களுக்கு சலுகைகளை வழங்கி, நாட்டை வங்குரோத்தடையச் செய்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதே வழியில் அவ்வாறே அதை அமுல்படுத்தி வருகின்றார்.

தற்போதைய அரசாங்கத்திற்கு நாட்டின் சாதாரண மக்கள் மீது எந்த உணர்வும் இல்லை.

இதற்கு சரியான உதாரணம் மின்கட்டணம் அதிகரிப்பு. நாட்டின் வளங்களை கொள்ளையடித்து நாட்டை அழிவுப் பாதைக்குக் கொண்டு வந்த தரப்பை, பாதுகாத்து வருவது தற்போதைய ஜனாதிபதியே இத்தகைய மோசமான அரசாங்கத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி எவ்வகையிலும் கைகோர்க்காது பதவிகள், சலுகைகளுக்காக இந் நாட்டு மக்களை ஒரு போதும் காட்டிக் கொடுக்க மாட்டேன் ஜனாதிபதியை நியமித்த தரப்பினர் அமைச்சுப் பதவிகளைக் கோருகின்றனர். தற்போது அது சூதாட்டமாக மாறியுள்ளது என்றார். (ம-7)


## DCM யாழ் நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

**A/L 2025**

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம் :
17.06.2023 காலை 8.00மணி (சனிக்கிழமை)

அனுமதியை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்
ஜூன் மாதக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது

நிர்வாகம் : 077 011 9434

(C-6745)



## சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்

முல்லைத்தீவு, கிளிநொச்சி, பூநகரி, பளை பிரதேசங்களில் வாழ் மக்கள் தங்களிடமுள்ள பழுதடைந்த விவசாய, மின்சாதன, பவர்ரூல்ஸ், கொங்கிறீற் மிக்சர், நமர் மற்றும் சிறு கைத்தொழில் இயந்திரங்கள் அனைத்தையும் நாளை சனிக்கிழமை (17.06.2023) இலவசமாக பழுது பார்த்து தருவதோடு எம்மிடமுள்ள அனைத்து விற்பனை சாதனங்களின் விலைகளையும் நினைக்க முடியாத விலைக்கழிவுடன் பேரம் பேசி பெற்றுக் கொள்ளலாம்.

வாருங்கள் பாருங்கள் வாங்கிச் செல்லுங்கள்

ஆர்க் என்ரபிறைசஸ் பிறைவேட் லிமிடட்
A9 வீதி, பரந்தன் சந்தி.

தொடர்புக்கு : 071 535 7800

(15961)



## TECHNO WORLD தொழில்நுட்ப கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

**A/L** புதிய கல்வியாண்டு **2025**

தொழில்நுட்ப பிரிவு

- திகதி 18.06.2023 (ஞாயிற்றுக்கிழமை)
- நேரம் : காலை 8.30

(தேசிய, மாவட்ட ரீதியில் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவு)

எமக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை

077 017 5346

(C-6744)



## நாவலர் கல்வி நிலையம்

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்நகர்

July 29ம் திகதி நடைபெறவுள்ள...
**All Island Service Exam**
**SLAS, SLEAS, SLPS, SLAcS (Open)**

August மாதம் நடைபெறவுள்ள...
**SLAS, SLEAS (Ltd)**

போட்டிப்பரீட்சைக்கான நேரடி வகுப்புகள்
ஆரம்பம் : 17-06-2023 சனி காலை 9.00 மணி

இலங்கையின் முன்னணி வளவாளர்களான
P. உமாசங்கர் P.கமல்தாசன்
T.தவசேகர்
மற்றும் துறைசார் வளவாளர்கள்

தொடர்பு : 0774696695 / 0761661986

(15971)



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 33 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- மூன்று இலட்சம் ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(15967)

076 733 6047
076 755 8606



## DMI Jaffna

நாளை: காலை 9:00

வர்த்தகம் | கலை

A/L-2025

Dmi Daniel | 077 848 0604

பொருளியல்
KR. உதயன்

உம் DMI யில்

(15960)



## NCAC - யாழ்நகர்

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி

**A/L 2025**

கலை & வர்த்தகம்

ஆரம்பம் : 17.06.2023
சனி காலை 8.00 மணி

அலுவலக தொடர்பு : 076 909 3283

(15971)



## NEC - யாழ்நகர்

பெருமாள் கோவில் அருகாமை

**A/L 2025**

கலை & வர்த்தகம்

ஆரம்பம் : 17.06.2023
சனி காலை 8.00 மணி

அலுவலக தொடர்பு : 076 535 0999

(15972)



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 4 பரப்பு காணி விற்பனைக்கு

- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி

(15967)

076 739 0413
076 436 5814



## அமெரிக்க லொத்தர் விசா

V2 TRAVELS

2022ம் ஆண்டு விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் வெளியாகி விட்டன.




அதிஸ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டவர்களின் அடுத்த கட்ட விசா நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன.

0768226240 / 0768226241

(C-6749)



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்




விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது -30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-6749)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org